மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்


# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 107* ஜனவரி *2025*


## போதுமான கிருபை

*PT# 547, Jan-Feb 1977, pp. 2,3*




“என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்”
*2 கொரி. 12:9*

1. இது ஒரு அற்புதமான வேத வசனமாயிருக்கிறது. *2025*-ம் வருடத்தின் சட்ட வாக்கியமாக இது மிகவும் உதவியாக இருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். இங்கே நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ கொடுக்கிற உற்சாகமான வார்த்தைகள் பவுல் அப்போஸ்தலருக்கு மட்டுமல்ல, அவரைப் போலவே கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டு, நம்முடைய ஜீவனைத் தேவனுக்கு பிரதிஷ்டை செய்து, அவருடைய பரிசுத்த ஆவியினால் ஊக்குவிக்கப்படுகிற நம் அனைவருக்கும் பொருந்துமென்று நாம் நிச்சயித்துக் கொள்ளலாம். பவுல் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டிருந்த "மாம்சத்திலே ஒரு முள்" என்பது அநேகமாக அவருடைய கண்பார்வை குறைபாடாக இருந்தது. அதன் சம்பந்தமாக அப்போஸ்தலருக்கு இருந்த அனுபவங்களும், அவைகள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதும், தேவனுடைய மற்ற எல்லா ஜனங்களின் நன்மைக்காகவே இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அதாவது அப்போஸ்தலரின் காலம் முதல் இந்நாள் வரை தேவனுடைய ஜனங்கள் அவ்வப்போது விசேஷித்த

## தூது நிரல்


1. போதுமான கிருபை........................................................1
2. உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுவது ஏன்? எவ்வாறு?............................................................4
3. பரத்திலிருந்து வருகிற பலம்.........................................8
4. நம்முடைய குறைவுகளெல்லாம் தேவன் நிறைவாக்குவார்.............................................................12
5. தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாகிய பரிசுத்த பவுல் தேவனை மகிமைப்படுத்தினார்......................14

சோதனைகளினால் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த சோதனைகளின் அவசியமும் மதிப்பும் பல நேரங் - களில் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படாதவைகளாக இருக்கின்றன. ஆகையால் அவ்விதமாகப் பாடுபடுகிற தேவ ஜனங்கள் அனைவரின் நன்மைக்காகப் பவுல் அப்போஸ்தலரின் அனுபவங்கள் கொடுக்கப்பட்டிருக் - கின்றன.

*2.* பவுல் அப்போஸ்தலர் மனமாற்றமடைந்த காலத்தில் கர்த்தராகிய யெஷுஆவின் ஆவிக்குரிய சரீரத் திலிருந்து வெளிப்பட்ட பேரொளியினால் குருடாக்கப் பட்டிருந்தார். இறுதியாக அவர் தேவனுடைய மன்னிப் பைப் பெற்றுக் கொண்டார், அவருடைய பார்வை ஓரளவிற்குச் சரி செய்யப்பட்டது. அதற்குப்பிறகும் அவரு டைய கண்பார்வை தொடர்ந்து குறைவாகவே இருந்தது. அபிஷேகம் பண்ணப்பட்டவரை எதிர்த்தவராகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய அவருடைய சபைக்குத் தீங்கு விளைவித்தவராகவும் அவருடைய தவறான போக்குக் காகக் கொடுக்கப்பட்ட தகுந்த சிட்சையாக அதை எண்ணி, பொறுமையோடு சகித்தார் என்பதில் சந்தேக மில்லை. அவரிடத்தில் நீடித்திருந்த ஓரளவான கண் பார்வை குறைபாடானது சபைக்கும் கர்த்தருக்கும் இடையிலுள்ள நெருங்கிய பந்தத்தை இன்னும் தெளி வாக மதித்துணர அப்போஸ்தலருக்கு உதவினது என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" என்று யெஷுஆ சொன்ன வார்த் தைகள் விளக்குவதைப் போல், சபை வகுப்பாரும் யெஷுஆ கொடுத்த ஒரே பலியின் அங்கத்தினர்களா- யிருந்தார்கள்.

*3.* இருந்தாலும், காலப்போக்கில், அப்போஸ்- தலரின் கண்பார்வை குறைபாடு அவருடைய சுவிசேஷ ஊழியத்திற்குச் சற்று பாரமாயிருப்பதை அவர் உணர்ந் தார். அந்த குறைபாடு தொடர்ந்து நீடிப்பதைக் கர்த்தர் ஏன் அனுமதித்தார் என்று அவர் அநேகமாக யோசித் திருக்கக் கூடும். அவருக்கு முழுமையான பார்வை திறனைக் கொடுப்பது தெய்வீக வல்லமைக்கு மிக எளிதான காரியமென்று அவர் நன்றாக அறிந்திருந்தார். அதன் சம்பந்தமாக அவருக்குத் தொடர்ந்து நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பிணியாளிகளைக் குணமாக்குவதில் தேவனுடைய வல்லமை அவர் மூல மாகச் செயல்பட்டு கொண்டிருந்தது.எந்தளவிற்கெனில் அவருடைய சரீரத்திலிருந்து உறுமால்கள் முதலியவைகள் வியாதிக்காரர்மேல் போடப்படும் போது, அவர்கள் தெய்- வீக ஆசீர்வாதத்தையும் குணமாகுதலையும் பெற்றுக் கொள்ளும் அளவிற்காகும் *(அப். 19:12).* பவுல் அப்போஸ்தலர் கொஞ்ச காலம் பாடுபட்டபிறகு இந்த துன்பம் அவரிடத்திலிருந்து நீக்கப்படும் என்று அவர் நிதானித்திருப்பார். அது நீக்கப்படுவதற்காக அவர் மனத் தாழ்மையுடன் தேவனிடத்தில் மன்றாடும் நிலைக்குத் தேவன் அவரைக் கொண்டு வர சித்தமாயிருந்தார் என்றும் அவர் எண்ணி இருக்கக்கூடும்.

*4.* இந்த குணமாகுதலுக்காக அதாவது இந்த கொடிய துன்பம் அல்லது "முள்" நீக்கப்படுவதற்காக அவர் தேவனிடத்தில் வேண்டிக் கொண்டதாக அப் - போஸ்தலர் நமக்குச் சொல்கிறார். அவர் அதை மூன்று தரம் செய்ததாகவும் நமக்குச் சொல்கிறார் *(2கொரி 12:8).* இதன் சம்பந்தமாகப் பவுல் அப்போஸ்தலர் அதுவரை இன்னும் தெளிவாக உணராத ஒரு கருத்து இருக்கிறது. அது என்னவென்றால், அவருடைய கண்பார்வையின் குணமாகுதல் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களின் ஒரு பகுதியானதென்பதாகும். ஆனால் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்த மற்ற எல்லா ஜனங் களைப் போலவே, பவுல் அப்போஸ்தலரும் அவருடைய நியாயமாக்கப்பட்ட மனுஷீகம் முழுவதையும் பலி பீடத் தின்மேல் வைத்திருந்தார். மேலும் அவர் இழந்ததைத் திரும்பப் பெறுவதற்காக அல்லாமல் கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதரர்களுக்காகவும் சுயத்தை மறுத்து, பலி செய்வதற்காகத் தேவனால் அழைக்கப் பட்டிருந்தார். இந்த விஷயத்தை அப்போஸ்தலர் தாமே மற்றவர்களுக்கு விளக்கி இருந்தார்: *"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னி - ட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஊழியம்" (ரோம. 12:1).*

*5.* ஆனால் சரீர குணமாகுதல் உட்பட தேவ னுடைய ஆசீர்வாதங்களெல்லாம் அப்போஸ்தலரின் மூலம் மற்றவர்களுக்குச் செல்வதை அவர் அறிந்திருந்து, அவ்வித குணமாகுதலின் ஒரு பகுதி தனக்கும் கிடைக்கக் கூடுமா என்று எண்ணி இருப்பார். அவருக்குக் கொடுக் கப்பட்டிருந்த குணமாகுதலின் வரமானது, தங்கள் மனு ஷீகத்தை மரண பரியந்தம் பிரதிஷ்டை செய்திருந்த பரிசுத்தவான்களுக்குச் சாட்சியாக அல்லாமல், உலக ஜனங்களுக்குச் சாட்சியாக கொடுக்கப்பட்டிருந்தது என்று அவர் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியதா யிருந்தது. பலி செய்யும்படி அவர் செய்த பிரதிஷ்டையில், சிறிதளவும் கூட பின்வாங்க தேவன் அவரை அனுமதித் திருந்தால், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தயவுகளை- யும் விட்டு விடுகிறதை அது அர்த்தப்படுத்தியிருக்கும் என்று பவுல் அப்போஸ்தலர் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. ஏனென்றால் தேவனுக்காகவும் அவருடைய நோக்கத்திற்காகவும் நம்முடைய முழுமை யான அர்ப்பணிப்புக்கு முரண்பாடாயிருக்கிற பூமிக்குரிய காரியங்களை, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் விட்டுவிடும் போது தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தயவுகளையும் அளிப்பார் *(மத். 16:24).*

*6.* பவுல் அப்போஸ்தலரின் தவறான போக்கில் அவரை ஊக்குவிக்க தேவன் விரும்பவில்லை. ஆகையால் சரீர குணமாகுதலுக்காக அவர் செய்த வேண்டுகோளை தேவன் அவருக்கு அருளவில்லை. தேவனுக்குப் பிரதி ஷ்டை செய்த பிள்ளைகளில் அநேகர், சரீர குண மாகுதலுக்காகக் கேட்பது சிறந்த காரியமல்லவென்று அறியாமல் கேட்டபோது தேவன் அவர்களுடைய ஜெபத் திற்குப் பதிலளித்திருக்கிறார் என்பது உண்மை. அநேகர் பூமிக்குரிய காரியங்களால் ஈர்க்கப்பட்டு, அவைகளை விசேஷமாக நாடுகிறார்கள். மேலானவைகளுக்குப் பதி - லாக "அப்பங்களையும் மீன்களையும்" நாடுகிறார்கள் *(யோவா. 6: 2-69; லூக். 11: 9-13).*

*7.* ஆனால் "பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" என்று தேவன் பிரதி- ஷ்டை செய்த ஜனங்களுக்குச் சொல்லுகிறார் *(கொலே. 3:2).* இந்த பாடத்தையே அப்போஸ்தலரின் மனதில் பதியச் செய்யத் தேவன் விரும்பினார். கர்த்தராகிய யெஷுஆவைப் போலவே, பவுல் அப்போஸ்தலரும் எல்லா காரியங்களிலும் மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டியதாயிருந்தது *(1பேது. 2: 11, 12; 5: 3; 1 கொரி. 4: 16; 11: 1; பிலி. 3: 17; 4: 9).* ஆகையால் அவருடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்காமலிருப்பது ஏற்றதாக இருந்தது. இருந்தாலும் தேவன் அதற்குப் பதிலளிக் காமலிருப்பது பவுல் அப்போஸ்தலருக்கு ஒரு பாடமாக இருந்தது. மேலும் தேவனுடைய ஜனங்கள் அனை

வருக்கும், குறிப்பாக ஏதேனுமொரு விசேஷித்த அலுவலில் அவருடைய ஊழியக்காரர்களாக இருப்பவர்களுக்கும் இது ஒரு மதிப்பு வாய்ந்த ஆசீர்வாதமான பாடத்தை அளிக்கிறது.

*8.* பவுல் அப்போஸ்தலரின் அபிவிருத்திக்காக - வும், அவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்காகவும் இந்த "மாம்சத்திலுள்ள முள்" அவருக்கு விசேஷமாக உதவுமென்று தேவன் கண்டதால், அப்போஸ்தலரின் ஜெபத்திற்குப் பதிலாக அந்த சரீர துன்பத்தை நீக்காமலிருப்பது சிறந்ததாகுமென்று தேவன் கண்டார். இருந்தாலும் இன்னும் அதிக பலன் தரக் கூடிய, இன்னும் ஆசீர்வாதமான வேறொரு வழியில் தேவன் அந்த ஜெபத்திற்குப் பதிலளித்தார். தேவன் கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் பதிலளித்தார். அந்த பிரச்சனையை நீக்குவதற்கு பதிலாக அதை எதிர்கொள்வதற்காகவும், அதில் ஜெயங் கொள்வதற்காகவும், அதற்கு ஈடு செய்வதற்காகவும் தேவையான அதிக கிருபையையும் அதிக பலத்தையும் அவருக்கு அளிப்பதாகக் கர்த்தராகிய யெஷுஆ வாக்குத்தத்தம் செய்தார்.

*9.* சரீர ரீதியான குணமாகுதலின் மூலம் அப்போஸ்தலரின் ஜெபத்திற்குப் பதிலளித்திருப்பதைக் காட்டிலும் இந்த பதில் உண்மையாகவே ஆவிக்குரிய ரீதியில் அவருக்கு இன்னும் அதிக சிறந்ததாக இருந்தது. ஊழியத்தில் அவருடைய மனத்தாழ்மையையும் உபயோகமான தன்மையையும் பாதுகாப்பதற்கு "மாம்சத்திலுள்ள இந்த முள்" எவ்வளவு அவசியமானதாக இருந்ததென்று நாம் அறியோம், பவுல் அப்போஸ்தலரும் அறியாதிருந்தார். ஆனால் அவருக்கு அதிக கிருபை அளிக்கப்படுவது அதைவிட மேன்மையான ஆசீர்வாதமாக இருந்ததென்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளக் கூடும். ஏனென்றால் "முள்" நீக்கப்படுவதென்பது ஒரு அம்சத்தில் மட்டுமே அவருக்கு நிவாரணத்தை அளித்திருக்கும். ஆனால் கர்த்தருடைய கிருபை என்பது எல்லா காரியங்களிலும், வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் உதவும். ஆகையால் இந்த விஷயத்தைப் புரிந்து கொண்ட போது, “கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்” *(2 கொரி.12:9)* என்று அப் - போஸ்தலர் உற்சாகமாகக் கூறினதில் ஆச்சரியமில்லை.

*10.* பவுல் அப்போஸ்தலரின் இந்த அனுபவங்களினால் சுவிசேஷ யுகம் முழுவதும் கர்த்தருடைய அன்பான ஜனங்கள் அனைவரும் ஆசீர்வாதமான பாடங்களைப் பெற்றுக் கொண்டார்கள். நம் அனைவருக்கும் பல்வேறு "மாம்சத்தில் முட்கள்", பல்வேறு துன்பங்கள், பல்வேறு கஷ்டங்கள், பல்வேறு பரீட்சைகள் இருக்கின்றன. அவைகளில் சில பரீட்சைகள் சரீர ரீதியானவைகளாகவும், சில பரீட்சைகள் மனரீதியானவைகளாக - வும் இருக்கின்றன. சில பரீட்சைகளை மற்றவர்கள் நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். சில பரீட்சைகள் நாம் மற்றும் கர்த்தர் மட்டுமே அறிந்தவைகளாக இருக்கின்றன. கர்த்தர் நம்மிடமிருந்து நீக்காத துன்பங்களையும், சோதனைகளையும் கஷ்டங்களையும் அவர் ஞானமான மற்றும் அன்பான நோக்கங்களுக்காக அனுமதிக்கிறார் என்று அவர் தாமே கொடுத்த இந்த நிச்சயம் எத்தனை பேர்களுக்கு என்னே ஆறுதலை அளித்திருக்கிறது! இவைகளெல்லாம் நம்முடைய நன்மைக்கேதுவாக நடக்கின்றனவென்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார்(ரோம. *8:28).* பிரதிஷ்டை செய்த அனைவரின் சார்பாக அவர் அறிவிக்கிறதாவது, "என் கிருபை உனக்கு போதும்; பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் (பெலவீனங்களை நிறைவாக்கும்)".

*11.* நாங்கள் இவ்வசனத்தை *2025*-ம் வருடத்தின் சட்ட வாக்கியமாகப் பரிந்துரைக்கிறோம். இது காலத்திற்குரியதென்றும் மிக தேவையானதென்றும் நாங்கள் நம்புகிறோம். இக்காலத்தில் செய்யப்பட வேண்டிய பெரிய வேலையைத் தேவன் தமது ஜனங்களுக்கு முன்பாக வைத்திருக்கிறார். அது எபிப்பெனி பாளயத்தைக் கட்டும் வேலையாக இருக்கிறது. எபிப்பெனி பாளயத்தில் உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப் பட்டவர்களும், மனமாற்றமடைந்த உண்மைத்துவமுள்ள யூதர்களும் இருக்கிறார்கள் *(E Vol 10, p. 672).* உண்மைத்துவமுள்ள பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களில் சிலர் பிரதிஷ்டை செய்து, பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரர்களாக இருக்கிறார்கள் (ஏனென்றால் பிரதிஷ்டை என்பது எப்பொழுதுமே செய்யப்பட வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது - *E Vol 4, p. 420; PT 1970, p. 88).* அவர்களிடமும் நமக்கு அதிக பொறுப்பு இருக்கிறது.

*12.* பவுல் அப்போஸ்தலரைப் போலவே, பிரதிஷ்டை செய்த தேவனுடைய ஜனங்கள் அனைவரும் தங்களுடைய சொந்த பெலவீனங்களையும் குறைபாடுகளையும் மனத்தாழ்மையுடன் அங்கீகரித்து, மாம்ச புயத்தில் அல்லாமல், கர்த்தருடைய பெலத்தில் விசுவாச உறுதி வைக்க வேண்டும். கர்த்தருடைய பெலன் சகலத்திலும் போதுமானதாகவும், ஒருபோதும் தவறாததாகவும் இருக்கிறது. இவ்வாறு, இவ்வாறு மட்டுமே, நாம் ஜெயங் கொண்டவர்களாகி, நிச்சயமான வெற்றியை நோக்கி முன்னேறக் கூடும். இவ்வாறு, இவ்வாறு மட்டுமே, “நான் பலவீனமாயிருக்கும்போதே (என் சொந்த பலத்தில் குறைவுபட்டிருக்கும்போது) பலமுள்ளவனாயிருக்கிறேன் (ஒருபோதும் தவறாத கர்த்தருடைய பலத்தில்) ; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்” *(2கொரி. 12:10)* என்றும், “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” *(பிலி.4:13)* என்றும் நாமும் அப்போஸ்தலருடன் சொல்லக் கூடியவர்களாயிருப் - போம்.

*13.* அன்பான சிலுவையின் உடன் ஊழியக்காரர்களே, நாமும் அப்போஸ்தலரின் இந்த கருத்து கோணத்தை எடுத்துக் கொண்டு நன்மை செய்வதிலும் *(கலா. 6:9,10)*, சத்தியத்தைத் தியானித்து, அப்பியாசித்து, பரப்புவதிலும், நம்முடைய அனுபவங்கள் எல்லாவற்றையும் உண்மையான விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டு விடாமுயற்சியோடு முன்னேறுவோமாக. மேலும் நம்முடைய துன்பங்கள், பெலவீனங்கள், அபூரணங்கள், குறைபாடுகள் எல்லாம் நமக்குத் தீங்கு விளைவிப்பவைகளாக இராமல், கர்த்தருடைய கண்காணிப்பின்கீழ், நாம் மனப்பூர்வமாய் செய்யும் முயற்சிகளை தம்முடைய பலத்துடன் இன்னும் அதிகமாக நிறைவாக்க அவருக்கு வழி வகுக்கின்றன என்ற இந்த வார்த்தைகளின் சத்தியத்தை உணருவோமாக.

*14.* மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக, கர்த்தருடைய மிகுதியான கிருபையினாலும், சகலத்திலும் போதுமான பலத்தினாலும் சத்தியத்திற்குச் சாட்சி கூறவும், சத்திய செய்தியைப் பரப்பவும், விசேஷமாகக் கிறிஸ்து இரட்சகராகவும் ராஜாவாகவும் இருக்கிறார் என்ற செய்தியைப் பிரகடனம் பண்ணவும், நாம் முன் செல்லும் போது, கர்த்தர் நமக்குச் சகாயர், எப்பொழு -

துமே நம்முடனே கூட இருக்கிறார்; அவர் நம்மை விட்டுவிலகுவதுமில்லை; நம்மை கைவிடுவது மில்லை என்று அவர் கொடுத்த அருமையான வாக்குத் தத்தத்தை *(எபி. 13:5,6)* எப்பொழுதுமே மனதில் கொள்- வோமாக.

நம்முடைய வருடத்தின் வசனத்திற்குப் பொருத்தமானதாகப் பின்வரும் கவிதையைப் பரிந்துரைக்கிறோம்:

கர்த்தாவே, நீர் வாக்குத்தத்தம் பண்ணின கிருபையை எனக்கு தந்தருளி,
பிரதிஷ்டை செய்யப்பட்ட என் இருதயத்தை அதினால் நிரப்பும்.
உமக்காகவே ஜீவிப்பதும், பேசுவதும், உழைப்பதுமே தான்,
இது முதல் எனது பிரதான நோக்கமாக இருக்கும்.

நான் மகிழ்ச்சியுடன் உமது ஊழியத்தில் ஈடுபடும்போது,
என் அபூரணமான வேலை,
கிறிஸ்துவின் மூலம் உமக்குப் பிரியமாக இருக்கும் என்ற எண்ணம்
என் ஆத்துமாவைச் சந்தோஷத்தினால் நிரப்பும்.

ஒருபோதும் உறங்காத உமது கண்கள் சகலத்தையும் காண்கின்றன,
கர்த்தாவே, உமது சமுகம் சகலத்தையும் நிரப்புகிறது;
ஆதலால் நீர் எனக்களிக்கிற பங்கு எங்கிருந்தாலும்,
என் ஆவி உம்மைப் பற்றிக் கொள்ளும்.

உலக ரீதியான எல்லாவற்றையும் மறுதலித்து,
புகலிடமான உமது செட்டையின் கீழ் பாதுகாப்பு பெற்ற நான்,
எனக்குத் தேவையானதையெல்லாம் உம்மிடத்தில் பெற்றுக் கொள்வேன் என்பதே,
இதுமுதல் என்னுடைய இனிமையான எண்ணமாக இருக்கும்.


★★★★★★★★★★★★★★★★★★★★★

# உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுவது ஏன்? எவ்வாறு?

***PT# 547, Jan-Feb 1977, p.10***

“உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.”
*(ரோம. 5:2-5)*

*1.* "**நா**ம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று *அப் 14:22* வசனத்தில் நமக்குச் சொல்லப்படுகிறது. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ நமக்குச் சொல்கிறார்.



ஆனால் இவைகளெல்லாவற்றிலும் அவருடைய அருமையான சமாதானத்தை அளித்து அவர் நமக்கு ஆதரவளிக்கிறார் *(யோவா. 16:33; 14:27).* “அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து யெஷுஆவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” *(பிலிப். 4:7).*

*2.* உங்களுக்கு ஏதேனுமொரு உபத்திரவம் இருக்கிறதா? அப்படியிருந்தால், விழுந்துபோன மாம்சத்தினால் உண்டான இயற்கையான காரணங்களினால் உங்களுக்கு அந்த உபத்திரவம் வரவில்லை என்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள். ஒரு வேளை நீங்கள் செய்திருக்கிற ஏதேனுமொரு தவறினால் உங்களுக்கு இந்த உபத்திரவம் நேரிட்டிருக்கிறதா? *(கலா. 6:7,8).* உங்களுக்கு வருகிற உபத்திரவம் உங்கள் கிரியையின் விளைவாக இருக்கக் கூடுமா? அப்படியானால் மனம் வருந்தி சீர்திருந்தும்படி கவனமாயிருங்கள். "உங்களில் ஒருவனும் … பொல்லாங்கு செய்தவனாக …பாடுப் படுகிறவனாக இருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதின் நிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" *(1 பேது. 4: 14-16; 3: 12-17).*

*3.* “என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் *(மத். 5:11,12)* என்று சொல்லி நம்முடைய கர்த்தர் நமக்கு அதிக உற்சாகத்தை அளிக்கிறார். ஆகையால் நாம் கிறிஸ்துவின் நிமித்தமும் அவருடைய வார்த்தையின் நிமித்தமும் பாடுபட்டால், தேவனுக்கு நன்றி கூறி, திடன் கொள்ள வேண்டும். “மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என்

பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத். 10:32,33) என்று நம்முடைய கர்த்தர் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர வேண்டும்.

4. தேவனுக்கு பிரதிஷ்டை செய்திருக்கிற நாம் அனைவரும் நமக்களிக்கப்படும் சம்பளத்தின் ஒரு பாக மாக, சத்தியம் மற்றும் நீதியின் நிமித்தம் இக்காலத்தில் வருகிற பாடுகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிரதிஷ்டை செய்து, கிறிஸ்துவின் அடிச்சுவடு களை பின்பற்றுகிற நாம் அனைவரும் (1 பேது. 2:21) நம்முடைய விசுவாச உண்மைத்துவத்தின் நிரூபணமாக இருக்கிற இந்த சம்பளத்தைப் பெற ஆவலாயிருக்க வேண்டும். உங்களுக்கு இக்காலத்தில் கிறிஸ்து வினிமித்தம் எவ்வித பாடுகளும் நேரிட வில்லையா? அல் -லது மிக குறைவாகவே பாடுபடுகிறீர்களா? நீங்கள் பாடுபடும் காலம் முடிந்துவிட்டதென்று நீங்கள் என்ன தொடங்குகிறீர்களா? கடந்த காலத்தில் நீங்கள் அவர் நிமித்தம் பாடுபட்டீர்கள் என்ற காரியத்தின்மேல் உங்கள் நம்பிக்கைகளை கட்டுகிறீர்களா? அது ஒரு பெரிய தவறாகும். நாம் இன்னும் சத்துருவின் தேசத்திலிருக்கும் போதே சமாதானம்,சமாதானம் என்று சொல்லி தேவ னுடைய ஊழியக்காரர்கள் நித்திரை பண்ணும்படி செய்வ தற்கு எதிராளியானவன் உபயோகிக்கிற ஒரு தந்திரமாக இது இருக்கிறது.

5. நம்முடைய இருதயங்களில் ஆளுகை செய் - யும் தேவசமாதானமானது (கொலோ. 3:15) ஜீவனுள்ள ஒரு சமாதானமாக இருக்கிறது. உபத்திரவத்திலும் கூட அது நமக்கு இருதய மற்றும் மன அமைதியை அளிக் கிறது. அது ஆழ்ந்து தூங்குகிறவர்களுக்கு இருக்கும் சமா - தானம் அல்ல. “ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர் களாயிருக்கக்கடவோம்” (1 தெச. 5:6). சிலர் “கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடை கிறார்கள்” (மாற். 4:17; கலா. 5:7,8). “நீயும் யெஷுஆ கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி” (2 தீமோ. 2:3). “அக்கிரமம் மிகுதியாவதினால் அநேக - ருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற் பவனே இரட்சிக்கப்படுவான்” (மத். 24:12,13).

6. ஆகையால் அன்பான சகோதரரே, உங்க - ளுக்கு கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகள் வரவில்லை யென்றால் நீங்கள் உங்களுடைய பிரதிஷ்டையின் உடன்படிக்கையின் காரியங்களை நிறைவேற்றாமல் இருக்கக்கூடும் என்பதை குறித்து கவலைப்பட வேண்டும். அதாவது நீங்கள் செய்ய வேண்டிய அளவிற்கு மனுஷருக்கு முன்பாக வார்த்தையினாலும் செயலி னாலும் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் அறிக்கை பண்ணாமலிருக்கக் கூடும் என்பதை குறித்து கவலைப்பட வேண்டும். அது உண்மையாயிருந்தால் நீங்கள் உலகத்தையும் மாம்சத்தையும் பிசாசையும் மேற்கொள்ளாதிருக்கிறீர்கள் என்பதையும், அதற்கு மாறாக அவைகளினால் மேற்கொள்ளப்பட்டு அடக்கி வைக்கப்படுகிறீர்கள் என்பதையும் அர்த்தப்படுத்தும். இவர்களைக் குறித்து யெஷுஆ சொன்னதாவது, “ ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப் படுவார்” (மாற். 8:38).

7. கர்த்தராகிய யெஷுஆவின் காலத்தில், அவரையும் அவருடைய சீஷர்களையும் துன்புறுத்தின வர்கள் புறஜாதியார்களாக இல்லாமல், ரோம அரசாங் கத்தினால் ஆதரவு பெற்ற யூத மத தலைவர்கள் மற்றும் மதபிரிவு பற்றுடன் அவர்களை பின்பற்றினவர்களாக இருந்தார்கள். இக்காலத்திலும் பேர்சபை வேசித் தனத்தில் ஈடுப்படுகிறது. அதாவது தான் கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகையாக உரிமை பாராட்டும் அதே நேரத்தில் உலகத்தாரோடு கலந்து, அவர்களுடன் இணைந்து கொள்கிறது.

## இருள் வெளிச்சத்தை பகைக்கும்

8. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று நம்முடைய கர்த்தர் நமக்குச் சொல்லி இருக்கிறார் (யோவா. 16:13). தப்பறையிலும் தவறான நடத்தையிலும் ஆழமாக ஈடுப்படுகிற உலக ரீதியான பேர்சபை அமைப்புகளிடமிருந்து எப்பொழுதுமே இந்த உபத் திரவம் வருவதை போல் இக்காலத்திலும் அவ்வாறு இருக்க நாம் எதிர்பார்க்க வேண்டும். யெஷுஆ, ஆதி சபை மற்றும் இக்காலம் வரையுள்ள சீர்திருத்தவாதிகள் அது அவ்வாறே இருப்பதை கண்டார்கள். இன்றைக்கும், அதிக பிரகாசிப்பித்தல் இருந்தாலும், அது அவ்வாறே இருக்கிறது. இருள் வெளிச்சத்தை பகைக்கிறது. “அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.” “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவை களாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப்பார்க் கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது” (யோவா. 1: 5; 3: 19, 20). யெஷுஆவின் காலத்தில் அது அவ்வாறு இருந்தது. இன்றைக்கும் அவ்வாறே இருக்கிறது.

9. பரிசுத்தவான்களை தவிர மற்ற அனைவரும் கொடியவர்களாகவும் கனிவற்றவர்களாகவும், கிறிஸ்து வின் உண்மையான சீஷர்களை துன்புறுத்தி அவருடைய போதனைகளை எதிர்க்க விருப்பமுள்ளவர்களாக இருக் கிறார்கள் என்று நாங்கள் அர்த்தப்படுத்தவில்லை. நல்ல நோக்கமுடைய பல உலகத்தாரும் இருக்கிறார்கள் என்று நாங்கள் அறிகிறோம். நாங்கள் முன் வைக்கிற கருத்து என்னவென்றால், தேவனுடைய வார்த்தையின் சத்திய த்தை விசுவாச உண்மைத்துவத்துடன் பற்றிக் கொள்கிற வர்களுக்கும் உலகத்தாருக்கும் இடையில் அதிக முரண் பாடு இருக்கும் என்பதாகும். விசேஷமாக பிரகாசிப் பித்தலின் இந்த காலத்திலும் இருண்ட யுகங்களின் தப்பறைகளை பற்றிக் கொள்கிறவர்களின் காரியத்தில் இது உண்மையாக இருக்கிறது. பிரதிஷ்டை செய்தவர் களிடம் உலகத்தார் தொடர்ந்து வெறுப்பை வெளிப் படுத்துவார்கள். உலகத்தாரில் சிலர் சத்தியத்தையும், நீதியையும், பரிசுத்தத்தையும் பகைக்கிறார்கள். மற்றவர் கள் இந்த வெளிச்சத்துடன் முற்றிலும் ஒத்துணர்வு கொள்ளாததினால் தேவனுடைய விசுவாச உண்மைத் துவமுள்ள பிரதிஷ்டை செய்த ஜனங்களுக்கு ஆதரவளிக் கவோ உதவி செய்யவோ மாட்டார்கள்.

## நம்முடைய சமாதானத்தின் ஊற்று

10. நம்முடைய உபத்திரவத்திலும், விரைவில் வரப்போகிற ராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப் பதிலும், ராஜ்யத்தின் நோக்கங்களுக்காக ஊழியஞ் செய் வதிலும் நாம் உலகத்தாரிடமிருந்து நம்முடைய

சமாதானத்தைப் பெற எதிர்பார்க்காமல், தேவனிட மிருந்து சமாதானத்தைப் பெற எதிர் பார்க்க வேண்டு மென்பது உண்மையாயிருக்கிறது. உலகத்தில் நமக்கு வருகிற உபத்திரவத்தின் ஒரு பகுதியானது, நாம் மென் மேலும் கிறிஸ்துவின் சாயலில் வளருவதினால் வருகிற தென்று நாங்கள் நம்புகிறோம் (ரோம. 12:2). ஆகையால் மற்றவர்கள் இவ்வுலகத்தில் அடைகிற திருப்தியை நாம் அடைய கூடாதவர்களாக இருக்கிறோம். நம்முடைய சரீரத்தை அடக்கி, அதின் இயற்கையான விருப்பங்களை கட்டுப்படுத்துவதே நம்முடைய பிரதான வேலையாக இருக்க வேண்டும். அதற்குப்பிறகு அந்த சரீரம் தேவ னுடைய ஆசீர்வாதமான ஊழியத்தில் இயன்றவரை முழுமையாக உபயோகிக்கப்படும்படிக்கு, அதை புது இருதயம் மனம் சித்தத்திற்கு கீழ்ப்படுத்த வேண்டும். தேவனென்ற ஒரே எஜமானருக்கு நாம் ஊழியஞ் செய்ய வேண்டும் (1 கொரி. 9: 27; லூக். 16: 13; ரோம. 6: 16; எபே. 5: 1, 2). நமக்குள்ளிருக்கிற எதிர்ப்பு, அதாவது நம்முடைய சொந்த பாவமான மற்றும் சுயநலமான மனுஷீக இயல்புகள் நம்முடைய புது இருதயம் மனம் மற்றும் சித்தத்திற்கு விரோதமாக போர் செய்வது (ரோம. 7: 14-25) நமக்கு மிகுந்த சோதனையாக இருக்கும். இந்த எதிர்ப்புக்கு கூடுதலாக, பிரதிகூலமான சூழ்நிலை களினால் நமக்கு வருகிற பாடுகள், மற்றவர்கள் நம்மை தவறாக புரிந்து கொள்வதினாலும், எதிர்ப்பதினாலும், துன்புறுத்துவதினாலும் வரும் பாடுகள் - இவைக ளெல்லாம் உலகத்தில் நமக்கிருக்கிற உபத்திரவங்களாக இருக்கின்றன.

*11.* ராஜ்யத்தில் கிறிஸ்துவின் சிங்காசனத்தில் அவரோடு வீற்றிருக்கும் அவருடைய மணவாட்டியாகிய 1,44,000 பேர்களை கொண்ட சிறுமந்தை வகுப்பார் மட்டுமே (லூக். 12: 32; வெளி. 14: 1; 19: 7; 21: 9) உபத்திர வப்பட்டார்கள் என்று நாம் எண்ணக் கூடாது. உபத்திர வத்திலிருந்து வந்த பரிசுத்தவான்களாகிய திரள்கூட்டத் தாரும் உபத்திரவப்பட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும் தகுதியைப் பெறவில்லை யென்றாலும், மணவாட்டியின் தோழிகளாக இருக்கிறார் கள் (ஆதி. 24:61)- "அவள் பின்னாலே செல்லும் அவளு டைய தோழிகளாகிய கன்னிகைகள்" (சங். 45:14,15). “இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியான வருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர் கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத் திற்கு முன்பாக இருந்து [சிங்காசனத்தில் அல்ல; மண வாட்டி வகுப்பார் சிங்காசனத்தில் இருப்பார்கள்], இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார் கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக் குள்ளே வாசமாயிருப்பார் … தேவன்தாமே இவர்களு டைய கண்ணீர் யாவையும் [ஏமாற்றம் மற்றும் துக்கத்தின் கண்ணீர்] துடைப்பார்” (வெளி. 7: 9-17).

*12.* ஆனால் புதிய பூமியில் தங்களு டைய சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ள போகிற, தேவ னுக்கு பிரதிஷ்டை செய்த, ஊழியக்காரர்களின் காரியம் எவ்வாறாக இருக்கும்? ஏனென்றால் உயிர்த்தெழுதலில் பரத்திற்குரிய மகிமைகளும் பூமிக்குரிய மகிமைகளும் இருக்கின்றன (1 கொரி. 15: 40; 2 பேது. 3: 13). நீதிமான் களுக்கு பூமிக்குரிய சுதந்தரம் அளிக்கப்படுமென்று பழைய ஏற்பாடு போதிக்கிறது (சங். 37: 9, 11, 22, 29, 34). ஆபேல் முதற்கொண்டு யோவான் ஸ்நானன் வரையுள்ள மூப்பரான பாத்திரவான்களும் விசுவாச உண்மைத்துவ முள்ளவர்களாக நிரூபிக்கப்பட்டு, தங்களுக்குரிய வெகு மதியை பெற்றுக் கொள்வதற்கு உபத்திரவப்படுவது அவசியமாயிருந்தது (எபி. 11). அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியில் அவருடைய பிரதிநிதி களாக இருப்பார்கள் (லூக். 13: 28; மத். 11: 11).

*13.* இக்காலத்தில் தேவனுக்கு பிரதிஷ்டை செய்கிற ஜனங்கள் அனைவருக்கும்கூட உபத்திரவங்கள் அவசியமாயிருக்கின்றன. ஏனென்றால் அவர்களும் விரை வில் வரவிருக்கிற கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஒரு மகிமை யான பங்கை பெற அபிவிருத்தி செய்யப்பட்டு கொண்டு தகுதியுள்ளவர்களென்று நிரூபிக்கப்பட்டு கொண்டிருக் கிறார்கள். “அன்றியும் கிறிஸ்து யெஷுவாவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படு வார்கள்” (2 தீமோ.3:12). “நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே (பொல்லாத உலகத்திலே) ஜீவனம்பண்ண” வேண்டும் என்று நமக்கு சொல்லப்படுகிறது (தீத்து. 2:12; கலா. 1:4). தேவனுடைய ஜனங்கள் உபத்திரவத்தை விசுவாச உண்மைத்துவத்துடன் சகிக்கும் போது பலப்படுத்தப் படுகிறார்கள். நாம் ஏன், "அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்”. அதாவது ஏன் இந்த உபத்திரவம் அவசிய மாயிருக்கிறது என்பதை பார்த்தோம். அந்த உபத்திர வத்தின் கீழ் நாம் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை இப்போது கருத்தில் கொள்வோம்.

## நம்முடைய உபத்திரவங்களை எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

*14.* முதலாவதாக நாம் "உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்ட வேண்டும்" என்று நம்முடைய பாட வசனம் நமக்குச் சொல்லுகிறது. நாம் உபத்திரவங்களில் எவ்வாறு மேன்மை பாராட்டக் கூடும்? துன்புறுத்தல், தவறாக புரிந்து கொள்ளப்படுதல், துன்பங்கள், தூஷணம், வறுமை, நோய், பாடுகள், சரீர மன மற்றும் ஒழுக்க ரீதியான அபூரணங்கள் போன்ற உபத்திரவங்களின் நிமித் தம் நாம் மேன்மை பாராட்ட கூடாது. ஆனால் அந்த உபத்திரவங்களின் நோக்கத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, அதாவது நாம் "காணப்படுகிறவை களை அல்லாமல், காணப்படாதவைகளை நோக்கி இருக்கும்போது", இந்த உபத்திரவங்கள் நம்மில் "மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை" உண்டாக்குகின்றன வென்றும், நாம் குணநலன்களில் வளர்ந்து, கிறிஸ்துவின் சாயலில் அபிவிருத்தி அடைவதே அந்த உபத்திரவங் களின் நோக்கமாக இருக்கிறதென்றும் மனதில் கொள்ளும்போது (2கொரி. 4:17,18), நாம் உண்மை யாகவே உபத்திரவத்தில் களிகூர்ந்து, அவைகளில் மேன்மை பாராட்ட கூடும்.

## உபத்திரவம் பொறுமையை உண்டாக்கும்

*15.* நாம் உபத்திரவத்தினால் சரியாக பயிற்று விக்கப்பட்டால், அது நமக்கு சில அற்புதமான விளைவு களை உண்டாக்குமென்று அறிந்து நாம் உபத்திரவத் திலேயே மேன்மை பாராட்ட வேண்டுமென்று நம்முடைய பாட வசனம் சொல்லுகிறது. முதலாவதாக, உபத்திரவம் நம்மில் பொறுமையை உண்டாக்குவதினால் நாம் அதில் மேன்மை பாராட்டுகிறோம். ரோம. 5:2 மற்றும் 5:11 வசனங்களில் "மேன்மை பாராட்டுகிறோம்" என்று

மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "பேரானந்தம் அடையுமளவிற்கு மிகவும் சந்தோஷப்படுவது"அல்லது "மகிமைப்படுவதென்பதாகும்". ரோம. 5:3 வசனத்தில் "பொறுமை" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை "மகிழ்ச்சி யோடு சகித்தல்" (*cheerful endurance*) அல்லது "விடா முயற்சியோடிருத்தல்" என்ற அர்த்தமுடையதாயிருக் கிறது. அது *ASV*-ல் "*steadfastness*" (விடாமுயற்சி) என்றும் ரோதர்ஹாமில் "*endurance*" (சகித்தல்) என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சகித்தல் என்பது விருப்பமில்லாத ஒரு சகித்தலாக இல்லாமல், மகிழ்ச்சி யோடு, சந்தோஷமாக சகிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும்.

*16.* பொறுமை என்பது எல்லா குணநலன் களுடனும் தொடர்புடைய ஒன்றாக இருக்கிறது. மற்ற குணநலன்கள் எல்லாவற்றையும் முழுமையாக அபி - விருத்தி செய்து, எல்லா சூழ்நிலைகளின் கீழும் அவை களை காத்துக் கொள்ளும்வரை பொறுமை விடாமுயற்சி யோடு செயல்படும். நாம் "பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாக" இருக்க வேண்டும் (லூக். 8:15). நாம் ஜெயங் கொள்கிறவர்களாக இருக்க விரும்பினால் "நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் (நமக்காக குறிக்கப் பட்டிருக்கிற பாதையில் - *Diaglott*) பொறுமையோடே (மகிழ்ச்சியோடு சகித்தல், விடாமுயற்சி, உறுதி) ஓட" வேண்டும். கர்த்தராகிய யெஷுஆ நமக்கு மகிழ்ச்சியோடு சகித்தலுக்கு அதிசயமான முன்மாதிரியாயிருக்கிறார். அதை குறித்து சிந்திக்கும் போது வெற்றியடையும்வரை தொடர்ந்து முன்னேற அது நமக்கு உதவும் (எபி. 12: 1, 2; சங். 40: 8; யோவா. 4: 34). "நீங்கள் தேவனுடைய சித்தத்தின் படி செய்து (பூரண அன்பின் இலக்கை அடைந்தபிறகு) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும் படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதா யிருக்கிறது" (எபி. 10:36). மற்றெல்லா குணநலன்களை அபிவிருத்தி செய்வதற்கும் பலப்படுத்துவதற்கும் படிகப் படுத்துவதற்கும் பொறுமை இவ்வளவு அவசியமானதாக இருப்பதினாலும், பொறுமை உபத்திரவத்தின் மூலம் மட்டுமே உண்டாக்கப்படுவதினாலும், நாம் நிச்சயமாக உபத்திரவத்திலே மேன்மை பாராட்ட வேண்டும். இவ் வாறாக "எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத் - திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" (2கொரி. 7:4) என்று நாமும் பவுல் அப்போஸ்தலருடன் சொல்லக் கூடியவர்களாக இருப்போம்.

## பொறுமை அங்கீகாரத்தை உண்டாக்கும்

*17.* கிறிஸ்துவின் சாயலை அடைவதில் நம் முடைய குணாம்சத்திலுள்ள மற்ற எல்லா ஆவியின் கனிகளை பூரணப்படுத்துவதற்கு பொறுமை அவசிய மானதாகும். நாம் கிறிஸ்துவின் சாயலை அடையும்போது, அது நமக்கு தேவனுடைய அங்கீகாரத்தைக் கொண்டு வரும். இவ்வாறாக நம்முடைய பாட வசனம் காண்பிப் பதைப் போல் பொறுமை இந்த அங்கீகாரத்தை உண்டாக்குகிறது. நமக்கு தேவனுடைய அங்கீகாரத்தைக் கொண்டு வருகிற பண்பாகிய பொறுமையின் (மகிழ்ச்சி யோடு சகித்தலின்) இன்றியமையாத அடிப்படை உபத்திர வம் என்பதாக இருப்பதினால் நாம் உபத்திரவத்திலே மேன்மை பாராட்டுகிறோம்.

*18.* ரோம. 5:3 வசனத்தில் பரீட்சை என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "அங்கீகரிக் கப்பட்ட நிலை" (*approvedness - ASV*), நிரூபிக்கப்பட்ட குணாம்சம் (*proven character - New ASV*), அங்கீகாரம் (*approval –டயகலாட் -Diaglott*) என்று மொழி பெயர்க் கப்படுகிறது. இந்த மூன்று மொழி பெயர்ப்புகள் கிட்டத் தட்ட சரியான மொழிபெயர்ப்பைக் கொடுக்கின்றன. தேயர் (*Thayer*) என்பவர் அமைத்த கிரேக்க - ஆங்கில சொல் அகராதி இந்த கிரேக்க வார்த்தைக்கு பின்வரும் அர்த்தத்தை கொடுக்கிறது: நிரூபிப்பது (*proving*), பரீட்சிப் பது (*trial*), அங்கீகரிக்கப்பட்ட நிலை (*approvedness*), பரீட்சிக்கப்பட்ட குணாம்சம் (*tried character*), நிரூபணம் (*proof*), பரீட்சிக்கப்பட்டு தகுதியுள்ளதாக நிரூபிக்கப்பட்ட காரியம் (*specimen of tried worth*).

*19.* ஒவ்வொரு நாளும், நம்முடைய ஓட்டத்தின் முடிவிலும், தேவனுடைய அங்கீகாரத்தையும், "நன்றாக செய்தாய்" என்று அவர் அளிக்கும் பாராட்டுதலையும் பெற நாம் அனைவரும் நிச்சயமாக விரும்புகிறோம். பலவகையான உபத்திரவங்களினால் பரீட்சிக்கப்படும் போது நாம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நிரூபிக்கப்படும்போது மட்டுமே இந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள கூடும். சகிக்க வேண்டிய ஏதேனு மொரு தீங்கு (கஷ்டம்) இல்லாவிட்டால் கிறிஸ்துவின் நல்ல போர் வீரன் தீங்கை சகிக்க முடியாது (2தீமோ. 2:3). நம்முடைய பரமபிதாவின் எல்லையற்ற ஞானத்தினாலும் அன்பினாலும், நாம் ஒவ்வொருவரும் பானம் பண்ணுவ தற்கு சிறந்ததான பாத்திரத்தை அவர் நமக்கு ஊற்றுகிறார். நாம் அவருடைய அங்கீகாரத்தைப் பெற விரும்பினால், சோதிக்கப்பட்டு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நிரூபிக்கப்பட வேண்டும்.

*20.* ஒருவன் கலப்பையின்மேல் தன் கையை வைத்து, பிரதிஷ்டை செய்து, அதற்குப்பிறகு முழுமை யாக பின்னிட்டு பார்த்தால், அல்லது பின்வாங்கி போனால் அவன் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ள வன் அல்ல (லூக். 9: 62; 17: 31, 32; எபி .10: 38). நாம் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற விரும்பினால் முடிவு பரியந்தம் விசுவாச உண்மைத்துவத்துடன் சகிக்க வேண்டும். நம்மை அதைரியப்படுத்தவும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை விட்டுவிட செய்யவும் எதிராளி நம்மைத் தூண்டுவான். ஆனால் நாம் "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்" (1 பேது. 5:9). நாம் கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக நமக்கு வரும் துன்பங்களை மகிழ்ச்சியுடன் சகிக்க வேண்டும். அவைகள் நம்முடைய இலக்கை அடைய செய்யும் கருவிகளாக இருப்பதால் அவைகளில் களிகூர வேண்டும். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, யெஷுஆ கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப் படும்" (1பேது. 1:7). இவ்வாறாக பொறுமை அங்கீகாரத்தை உண்டாக்கும்.

## அங்கீகாரம் நம்பிக்கையை உண்டாக்கும்

*21.* கோட்பாடு சம்பந்தமாகவோ நடத்தை சம்பந்தமாகவோ தேவன் ஒரு காரியத்தை அங்கீகரிக்க மாட்டார் என்று தெளிவாக அறிந்திருந்தும், நாம் அதை பின்பற்றினால், தேவனுடைய அங்கீகாரத்தை பெற நமக்கு என்ன அடிப்படை இருக்கிறது? "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று அவருடைய பாராட்டுதலை பெற நமக்கு என்ன அடிப் படை இருக்கிறது? நாம் அறிந்தே இவ்வித போக்கை பின்பற்றினால் நித்திய ஜீவனுக்கான நம்முடைய

நம்பிக்கை படிப்படியாக மறைந்து போம். ஏனென்றால் *“தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்” (கலா. 6:7,8).* ஆவிக்கென்று விதைப்பது தேவனுடைய அங்கீகாரத்தை யும் வெகுமதியையும் கொண்டு வரும். ஆகையால் *“நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே (cheerful endurance - மகிழ்ச்சியோடு சகித்துக்கொண்டு – இது நம்மில் நம்பிக்கையை உண்டாக்கும்) ஓடக்கடவோம்” (எபி. 12:1). “நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகா - திருந்தால் (முடிவு பரியந்தம் பொறுமையோடு சகித்தால்) ஏற்றகாலத்தில் அறுப்போம்” (கலா. 6: 7-9; எபி. 12: 1; மாற். 13: 13).*

*22. “நீங்கள் (கர்த்தருடைய ஊழியத்தில்) அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்”; “அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்” (எபி. 6:11,12; ரோம 12:11,12).*

*23.* மகிழ்ச்சியுடன் சகிக்கப்பட்ட உபத்திரவத்தினால் உண்டாகும் தேவனுடைய அங்கீகாரமானது *"நிலையும் உறுதியுமான"* ஆசீர்வாதமான நம்பிக்கையை அளிக்கிறது *(எபி. 6:19). “நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே (தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய பரிசுத்த மன இயல்பு) தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது” (ரோம. 5:5).* நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையினாலும், கிறிஸ்துவினுடைய மகிமையான ராஜ்யத்தில் பங்கு கொள்வதற்கான நம்பிக்கையினாலும் ஊக்குவிக்கப்படுகிறவர்கள், அவர்கள் சகிக்கவேண்டிய சிட்சைகளைக் குறித்தும், பரீட்சைகளைக் குறித்தும், உபத்திரவங்களைக் குறித்தும் எவ்விதத்திலும் வெட்கப்பட மாட்டார்கள். மாறாக அவைகளில் மேன்மை பாராட்டி, கிறிஸ்துவுக்காக பாடுபட பாத்திரராக எண்ணப்படுவதினால் சந்தோஷப்படுவார்கள்.

*24.* யாக்கோபு அப்போஸ்தலர் கூறுகிற புத்திமதியானது: *“என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் (பல்வேறு சோதனைகள் மற்றும் பரீட்சைகள் – இவைகள் தேவ தயவின் நிரூபணங்களாகவும், நம்முடைய அபிவிருத்திக்குரிய சந்தர்ப்பங்களாகவும் இருக்கின்றன) அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது” (யாக். 1:2-4).*

*25.* தேவனுடைய ஒவ்வொரு விசுவாச உண்மைத்துவமுள்ள பிள்ளையும் உபத்திரவத்தை அனுபவித்திருக்கிறான். அவைகளின் மத்தியில் அவன் தேவனுடைய ஆவியையும் வார்த்தையையும் விசுவாச உண்மைத்துவத்துடன் உபயோகிப்பதின் மூலம், தன்னுடைய குணாம்ச தவறுகளை அகற்றி, நல்ல குணாம்ச பண்புகளை அபிவிருத்தி செய்து கொள்ளும் திராணியை அடைந்திருக்கிறான். வேதாகமம் இந்த கருத்தை உறுதியாக போதிக்கிறது. கர்த்தராகிய யெஷூஆ பாவமில்லாதவராக இருந்தும், பாடுபடுவதின் மூலம் கீழ்ப்படிதலிலும் *(எபி. 5:8,9),* இரக்கத்திலும், விசுவாச உண்மைத்துவத்திலும் *(எபி 2:17,18),* குணாம்சத்தின் மற்றெல்லா அம்சங்களிலும் *(எபி.2:10;4:15)* பூரணப்படுத்தப்பட்டார். உபத்திரவமானது இறுதியாக ஜெயங் கொள்வதற்கு தேவையான பண்பாகிய பொறுமையை *(எபி.10:36)* தேவனுடைய ஜனங்களில் உண்டாக்குமென்று நம்முடைய பாடவசனம் நமக்குச் சொல்கிறது. தேவனுடைய பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தைக் காத்துக் கொண்டவர்களை தேவன் விசேஷமாக பாராட்டுகிறார் *(வெளி. 3:10).*

*26.* ஆகையால் நாம் உபத்திரவங்களில் அதிக மதிகமாக மேன்மை பாராட்டவும் அதிகமதிகமாக மகிழ்ச்சி கொள்ளவும் கற்றுக் கொள்வோமாக. அந்த உபத்திரவங்களினால் தேவன் திட்டமிட்ட பாடங்களைக் கற்றுக் கொள்வோமாக. தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் *(ரோம. 8:28,29)* என்று தேவன் வாக்குத்தத்தம் செய்யும்போது *"சகலமும்"* என்ற வார்த்தையில் உபத்திரவங்களும் அடங்கி இருக்கின்றன. இவ்வசனத்தில் சொல்லப்பட்ட விசேஷித்த நன்மை கிறிஸ்துவின் சாயல் என்பதாகும். உபத்திரவங்கள் நம்மில் பொறுமையை உண்டாக்குவதினாலும், நன்மை செய்வதில் இவ்வித விடாமுயற்சிக்கு (பொறுமைக்கு) தேவனுடைய அங்கீகாரம் வெகுமதியாக அளிக்கப்படுவதினாலும், அந்த அங்கீகாரத்தை உணரும் போது, அது இறுதியான வெற்றியை பற்றிய நம்பிக்கையினால் நம்முடைய இருதயத்தை நிரப்புவதினாலும் நாம் உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் இந்த நம்பிக்கை விருதாவாய் போவதில்லை. ஏனென்றால் கிறிஸ்து யெஷூஆவின் மூலம் தேவனால் நமக்குக் கொடுக்கப்படுகிற பரிசுத்த ஆவியின் மிக சிறந்த கனியாகிய தெய்வீக அன்பினால் நிரப்பப்பட்ட இருதயங்களை உடையவர்களுக்கு இந்த வெற்றியை அளிப்பதில் தேவன் களிகூருகிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## பரத்திலிருந்து வருகிற பலம்

***BS# 490, Jan. 1977, pp. 1-3***

“அன்றியும், எனக்கு
வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய
மேன்மையினிமித்தம் நான் என்னை
உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள்
கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான்
உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும்
சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது
என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம்
கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு
அவர்: என் கிருபை உனக்குப்போதும்;
பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்
என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை
என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து
நான் மிகவும் சந்தோஷமாய்
மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான்
பலவீனமாயிருக்கும்போதே
பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால்
கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும்

*பலவீனங்களிலும், நிந்தைகளிலும்,*
*நெருக்கங்களிலும், துன்பங்களிலும்,*
*இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்"*
*2கொரி. 12:7-10*



*1.* **ம**ற்றொரு வருடத்தின் புதிய ஆரம்பமானது, கடந்த காலத்தைக் குறித்தும், வருங்காலத்தைக் குறித்தும் நேர்மையுடன் சிந்திப்பதற்கு ஏற்ற காலமாக இருக்கிறது. கடந்த காலத்தை பின்னோக்கி பார்க்கும் போது, தேவனுக்கு முன்பாக நம்மிடமே நாம் உண்மையுள்ள வர்களாக இருந்தால், நாம் சில காரியங்களில் நன்மை செய்து ஓரளவு முன்னேற்றமடைந்திருந்தாலும், பல பாவங்களையும் செய்திருக்கிறோமென்று உணருவோம். நாம் செய்யக் கூடாத பல காரியங்களைச் செய்தோம் என்றும், செய்ய வேண்டிய பல காரியங்களைச் செய்யா திருந்தோம் என்றும் உணருவோம் *(ரோம. 7:15)*. தேவன் நியமித்த வழியில் நாம் இதுவரை ஒருபோதும் அவரிடத்தில் வராதிருந்தால், அல்லது அவரிடத்தில் வந்திருந்தும் அதிகமாகவோ குறைவாகவோ பின் வாங்கி இருந்தால், திரும்பப் புதுப்பித்துக் கொள்வதற்கு இது ஏற்றகாலமாக இருக்கிறது.

*2.* ஆதாமின் தண்டனையிலிருந்து நம்மை விடுவிப்பதற்கு நமக்காக மரித்த கிறிஸ்து யெஷுஆவின் மூலம் நாம் தேவனிடத்திற்கு வர வேண்டும். *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் (தேவன்) உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவா.1:9; ரோம. 8:1)*. கடந்த காலத்தைப் பின்னோக்கி பார்க்கும்போது, தேவன் நமக் களித்த ஏராளமான இரக்கங்களுக்காகவும் பரிபாலனங் களுக்காகவும் அவருக்கு நிச்சயமாக நன்றி கூறுவோம். மேலும் "நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலான வைகள் *(சங். 40:5)* என்று சங்கீதக்காரருடன் நாமும் உண்மையாகச் சொல்லுவோம்.

*3.* வருங்காலத்தை முன்னோக்கிப் பார்க்கும் போது, நம்முடைய விழுந்து போன நிலையையும், நம்முடைய அபூரணங்களையும், குறைபாடுகளையும், பெலவீனங்களையும், நம்முடைய சொந்த பெலத்திலே வருங்கால அனுபவங்களை எதிர் கொள்ள திராணியற்ற வர்களாயிருப்பதையும் உணருகிறோம். *"நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?"* (ரோம. 7:24) என்று சத்தமிட்டுக் கூற கூடியவர்களாயிருக்கிறோம். நமக்கு ஏதேனுமொரு சரீர ரீதியான குணமாகுதல் தேவையாயிருந்தால், அல்லது கர்த்தருக்கு நாம் செய்யும் ஊழியத்திற்கு இடையூறான பெலவீனங்கள் இருந்தால், பவுல் அப்போஸ்தலருக்குக் கர்த்தர் செய்த காரியத்தைக் கருத்தில் கொள்வதின் மூலம் நன்மையைப் பெற்றுக் கொண்டு, நமக்காகக் கர்த்தர் ஏற்பாடு செய்த பரிபாலனத்தில் இன்னும் முழுமையாக இளைப்பாறக் கூடும். பெலவீனமென்னும் பள்ளத்தாக் கிலிருந்து வெளியேறி, கிறிஸ்தவர்களாக நம்முடைய அபிவிருத்தியின் உயர்ந்த நிலைகளுக்குக் கொண்டு செல்லும் வாசலின் திறவுகோலைக் கண்டு பிடித்து, அதைக் திறக்க நமக்கு உதவும்.

*4.* பரிசுத்த பவுலின் அனுபவம் நம்முடைய பாட வசனத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வசனங்கள் தெய்வீக சித்தத்திற்குத் தாழ்மையுடன் பணிந்து, ஜெயங் கொண்ட ஒரு பரிசுத்தவானின் வார்த்தைகளாக இருக்கின்றன. அப்போஸ்தலர் குணாம்சத்தில் உயர்ந்தவராகவும், ராஜவிசுவாசமுள்ள வராகவும், உண்மைத்துவமுள்ளவராகவும், பலமுள்ளவ ராகவும் இருந்திருந்தாலும், அவர் விழுந்துபோன மனுகுலத்தின் ஒரு அங்கத்தினராக இருந்தாரென்றும், மனுகுலத்தில் பொதுவாகக் காணப்படுகிற பெலவீனங் கள் தனக்கும் இருக்கின்றனவென்றும் உணர்ந்திருந்தார். தேவன் அவரை மிக முக்கியமான மற்றும் மகிமையான வேலையைச் செய்ய அழைத்திருந்தார். அது புறஜாதியார் களுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் ஒரு வேலையாயிருந்தது. மேலும் முழு சபையின் நன்மைக் காக அவருக்கு விசேஷமான மற்றும் அற்புதமான வெளிப்பாடுகள் அளிக்கப்பட்டிருந்தன. கனம் பொருந் திய அன்பான மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அவருக்கு அதிக வெளிப்பாடுகள் அளிக்கப்பட்டிருந்தன.

*5.* அவர் ஒரு தரிசனத்தின் மூலம் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தார். மூன்றாம் வானமென்பது புதிய சகாப்தமாகிய கிறிஸ்து வின் மில்லினிய யுக ஆட்சியை அர்த்தப்படுத்துகிறது *(2 பேது. 3:6, 7, 13; ஏசா. 65:17)*. அவருடைய காலத்தில் பேசப் படாததும் வாக்குக்கெட்டாததுமான காரியங்கள் அவருக் குக் காண்பிக்கப்பட்டிருந்தன (நிச்சயமாக அவைகள் தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கத்தைப் பற்றிய காரியங்களாயிருந்தன. இப்பொழுது அவைகள் சுவிசேஷ யுக அறுவடை காலத்தின் வெளிச்சத்தில், பவுல் அப்போஸ்தலரின் எழுத்துக்களின் மூலம் நமக்கு வெளிப் படுத்தப்படுகின்றன). அக்காலத்தில் சபைக்கு அவை களை விளக்குவதற்கு அது ஏற்ற காலமாக இல்லாத தினால் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமான வைகளாக இருந்தன *(2கொரி. 12:3)*. புறஜாதியாரின் எல்லா சபைகளைக் குறித்தும் அவர் கவலைப்பட வேண்டியதாயிருந்தது *(2கொரி. 11:28)*. அவருடைய அலுவலின் பொறுப்புகள் பெரிதாக இருந்தன. அவரு டைய இந்த நிலை அதிக உழைப்பைக் கோருவதாகவும், சோதனைகள் நிறைந்ததாகவும், அதை நிறைவேற்று வதற்கு அதிக தைரியம், வைராக்கியம், திறன் மற்றும் சுயவெறுப்பைக் கோருவதாக இருந்தாலும், அது அதிக கனம் பொருந்திய நிலையாகவும் இருந்தது.

*6.* ஊழியத்தில் கர்த்தருடன் அவருக்கிருந்த இவ்வித நெருங்கிய ஐக்கியத்தின் கனத்தைப் பவுல் மதித்துணர்ந்தார். சோர்ந்துவிடாத வைராக்கியத்தின் மூல மும் உற்சாகத்தின் மூலமும் தம்முடைய மதித்துணருதலை வெளிப்படுத்தினார். ஆனால் அவ்வித ஊழியத்திலும்கூட கர்த்தருடைய அன்பான மற்றும் விசுவாச உண்மைத்

துவமுள்ள இந்த அப்போஸ்தலருக்கு ஒரு அபாயம் நேரிடக் கூடியதைக் கர்த்தர் உணர்ந்தார். அது பெருமை மற்றும் சுயத்தை உயர்த்துதல் என்ற அபாயமாக இருந்தது. அவரில் இந்த குணக்கேடுகள் வளர்ந்திருந்தால், மேலும் ஊழியஞ் செய்ய அது அவரைத் தகுதியற்றவராக ஆக்கி இருக்கும். அவருடைய வருங்கால வெகுமதியையும் அவர் இழந்திருப்பார். ஆகையால் அவருக்கு "மாம்சத்தில் முள்" அனுமதிக்கப்பட்டது. அது கர்த்தர் அனுமதிப்பதின் மூலம் அவருக்கு வந்திருந்தாலும், கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஒன்றல்ல. அப்போஸ்தலர் தாமே உறுதியளிப்பது போல், அது அவரைக் "குட்டும் சாத்தானுடைய தூதனாக" இருந்தது.

*7.* மாம்சத்தில் முள் என்பது எப்பொழுதுமே வேதனையான ஒரு காரியமாக இருக்கும். பவுல் அப்போஸ்தலரின் காரியத்தில் அது என்னவாக இருந்திருந்தாலும் (அது அவருடைய கண்பார்வை குறைபாடாக இருந்ததென்று நாங்கள் எண்ணுகிறோம்), அது அவரைக் கடுமையாகச் சோதித்த ஒரு காரியமாக இருந்தது. முதலில் அவர் அதினால் வருகிற வலியைக் குறித்தும், இடைஞ்சலைக் குறித்தும், கர்த்தருடைய ஊழியத்தில் உண்டாகிற இடையூறைக் குறித்து மட்டுமே எண்ணினார். அது சாத்தானுடைய தூதனாக இருந்தது. அதிலிருந்து விடுதலை பெற ஆவலாயிருந்தார். அது அவரை விட்டு நீங்கும்படி மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டார். ஆனால் அது நீக்கப்படவில்லை. அது நீடித்திருப்பதே கர்த்தருடைய சித்தமாக இருந்தது. அது அவருடைய மாம்சத்திற்கு மிகவும் விரும்பத்தகாததாக இருந்தாலும், ஆவிக்குரிய விதத்தில் அது அவருக்கு அதிக நன்மை விளைவிப்பதாக இருந்ததென்று உணர கர்த்தர் கிருபையாக அவருக்கு உதவினார். ஏனென்றால் அது நீக்கப்பட்டிருந்தால் அவர் மிக அதிகமாகப் பெருமை கொண்டிருக்கக் கூடும்.

*8.* அந்த பெலவீனத்தின் விளைவுகளை அப்போஸ்தலர் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டார். அவர் அதை வெறுக்கவில்லை, தம்முடைய பலத்தைக் குறித்து பெருமைப் பாராட்ட தொடங்கவில்லை. அதை நீக்குவதற்குக் கர்த்தர் தமது வல்லமையைச் செயல்படுத்தாததினால் கர்த்தரை நிந்திக்கவும் இல்லை. மாறாகக் கிருபையுடனும் மகிழ்ச்சியுடனும் தம்முடைய இருதயத்தைப் பற்றிய கர்த்தருடைய நிதானிப்பையும், அவருடைய பெலத்தைப் பற்றிய கர்த்தருடைய மதிப்பீட்டையும் ஏற்றுக் கொண்டார். அவர் மூலம் கர்த்தர் முழு சபைக்கும் ஊழியஞ் செய்து கொண்டிருந்தாலும், தனிப்பட்ட முறையில் தம்மிடம் இவ்வளவு அக்கறை கொள்ளுமளவிற்குக் கர்த்தர் தன்மேல் வைத்த அன்பை மதித்துணர்ந்தார்.

*9.* ஆம், தேவனுக்கு ஸ்தோத்திரம்! கர்த்தர் தம்முடைய சொந்த கருவிகளைத் தெரிந்து கொண்டு, அவர்கள் இன்னும் பயனுள்ள ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களைப் பட்டை தீட்டி, இழைத்து, மெருகேற்றுவார். அதற்குப் பிறகு அவருடைய ஜனங்களின் ஊழியத்தில் வல்லமையாகவும் திறமையாகவும் அவர்களை உபயோகிப்பார். ஆனால் மிகுந்த வேதனையும் உழைப்பும் நிறைந்த இந்த ஊழியங்களெல்லாவற்றிலும், முழு மனதுடனும் விசுவாச உண்மைத்துவத்துடனும் செயல்படுகிற இந்த கருவிகளைக் குறித்து அவர் விசேஷித்த அக்கறையையும் கொள்கிறார். அவர்கள் சகிக்கக் கூடிய அளவிற்கு மேலாகச் சோதிக்கப்பட அவர் இடங்கொடுக்க மாட்டார் (1கொரி. 10:13). அதே நேரத்தில் அவர்களுடைய சமச்சீரான நிலையைப் பாதுகாப்பதற்கு ஏதேனுமொரு மாம்சத்தில் முள்ளை அனுமதிப்பதின் மூலம், அவர்கள் பெருமை கொள்ளவும் அவர் இடமளிக்க மாட்டார்.

*10.* அப்போஸ்தலரின் ஜெபத்திற்குக் கொடுக்கப்பட்ட பதிலானது, அவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் ஒரு பதிலாக இல்லையென்றாலும் ஆசீர்வாதமான ஒரு ஆறுதலாக இருந்தது – "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் (குறைவுகளை நிறைவாக்கும்) ."

## நமக்களிக்கப்படுகிற அதே விதமான ஆறுதல்

*11.* தேவனுக்குத் தன்னை உண்மையாக அர்ப்பணிக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவ இருதயத்திற்கும் இதே ஆசீர்வாதமான ஆறுதல் அளிக்கப்படுகிறது. இக்காலத்திலும் கர்த்தருடைய ஜனங்களில் எத்தனைபேர் புயல்களால் அலை கழிக்கப்பட்டுத் தீவிரமாகச் சோதிக்கப்படுகிறார்கள். அந்த சோதனை மற்றும் துன்பம் நீக்கப்பட வேண்டுமென்று அநேகர் ஆர்வத்துடன் கர்த்தரிடம் வேண்டிக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் அவர்களுடைய நல்லொழுக்க பயிற்சிக்காகவும், அவர்களைப் பூரணப்படுத்துவதற்காக - வும் கூர்மையான அந்த முள் தொடர்ந்து நீடித்திருக்கும். இவர்களெல்லோரும் பவுல் அப்போஸ்தலரைப் போலவே "என் கிருபை உனக்குப் போதும்" என்று எஜமானர் சொன்ன வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பார்களாக. மற்ற நண்பர்கள் உன்னைக் கைவிட்டால் என்ன? என் தயவும் என் அன்பும் உனக்கிருக்கிறது; அது போதாதா? மாம்சம் பெலவீனமாக இருந்தாலும், சில நேரங்களில் இருதயம் சோர்ந்து போனாலும் என்ன? என் பலம் உன் குறைபாட்டை நிறைவாக்கும். நான் நியமித்த பாதையில் நீ நடக்கும் போது, உன் பெலவீனம் தேவனுடைய வல்லமையை இன்னும் அதிகமாக வெளியரங்கமாக்கும்.

*12.* மிகவும் தேவையான காலங்களிலும், மிகுந்த பெலவீனத்தின் காலங்களிலும், பரத்திலிருந்து வருகிற பலத்தினால் தன் பெலவீனத்திற்கு ஆதரவளிக்கும்படி செயல்படுகிற தேவனுடைய வல்லமையை உணராத உண்மையான தேவனுடைய பிள்ளை யார்? எந்த வேலையைச் செய்ய கர்த்தர் தன்னை அழைத்திருந்தாரோ, அதைச் செய்ய தான் முற்றிலும் திரணற்றவன் என்று எண்ணியிருந்தாலும், அந்த வேலை செய்து முடிக்கப் பட்ட பிறகு, அந்த விளைவில் தேவனுடைய அற்புதமான வல்லமை செயல்பட்டதை உணராதவன் யார்?

*13.* விசுவாச உண்மைத்துவமுள்ள அப்போஸ்தலரின் பெலவீனம் தெய்வீக பலத்தினால் நிறைவாக்கும்படிக்குச் செய்யப்பட்ட இவ்வித ஒரு கிருபையான ஏற்பாட்டை கருத்தில் கொண்டு, "கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்று அப்போஸ்தலர் பணிவுடன் சொல்கிறார். ஞானமான உக்கிராணக்காரராகத், தம்முடைய திறமைகள் எல்லாவற்றையும் முழுமையாக உபயோகித்து, தம்முடைய திறனை இயன்றவரை அதிகமாக விசுவாச உண்மைத்துவத்துடன் உபயோகித்த பிறகு, அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும், பரிசுத்த ஆவி மற்றும் வல்லமையின் வெளிப்பாடுகளினாலும் தம்முடன் கிரியை செய்கிற கர்த்தருடைய கரத்தைக் கண்டுணர்ந்து அவர் மகிழ்ந்தார் (எபி. 2:4; அப். 19:11, 12; 1 கொரி. 2:4).

பவுல் அப்போஸ்தலரின் சுபாவ திறன்களின் விசுவாச உண்மைத்துவமுள்ள உபயோகத்தை நிறைவாக்கும் தேவனுடைய வல்லமையின் இந்த வெளிப்பாடுகள், அப்போஸ்தலர் செய்த எல்லாவற்றையும் கர்த்தர் அங்கீ - கரிக்கிறார் என்பதற்குரிய நிரூபணங்களாக இருந்தன. தேவன் அவரை அங்கீகரித்ததை அவருக்கும் மற்றவர் களுக்கும் இது வெளிப்படுத்தினது. ஆகையால் அது மிகுந்த சந்தோஷத்திற்குரிய ஒரு காரணமாக இருந்தது.

*14.* தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருடைய ஊழியத்தில் தங்களுடைய தாலந்துகளைப் பணிவுநயத் துடனும், விசுவாச உண்மைத்துவத்துடனும் உபயோகிக் கும்போது, அப்போஸ்தலருக்கு இருந்ததைப் போலவே, அவர்களுடைய பெலவீனங்களும் தேவனுடைய கிருபை யினால் நிறைவாக்கப்படும் சிலாக்கியம் அவர்களுக்கும் அளிக்கப்படும். ஆகையால் "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக் கும்படி செய்து", அவர்களுடைய குறைவையெல்லாம் நிறைவாக்கி, தேவையான பெலத்தை அளித்து தேவன் அவர்களுடைய எல்லா காரியங்களின் மேலும் ஆதிக்கம் செய்து மாற்றி அமைப்பார் என்று விசுவாச உண்மைத் துவமுள்ளவர்கள் உணர்ந்து அவர்கள் அவர்களுடைய உபத்திரவங்கள், குறைபாடுகள் மற்றும் அவர்கள் எதிர் கொள்ளும் குழப்பமான சூழ்நிலைகள் ஆகியவற்றில் மகிழ்ச்சி கொள்ளக்கூடும் (பிலி. 4:13, 19; ரோம. 8:28). தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிற "சகலத்திற்கும் போதுமான கிருபை" என்ற திறவுகோலை உபயோ கிக்கும் போது மட்டுமே நாம் நம்முடைய பெலவீன மென்னும் பள்ளத்தாக்கிலிருந்து எழும்பி, நம்மால் மேற்கொள்ள முடியாத இடையூறுகளைக் கடந்து செல்லுமளவிற்கு அதிக பலம் மற்றும் வெற்றியின் உயரங்களை அடையும் திராணியுள்ளவர்களாவோம்.

*15.* ஆனால் உபத்திரவங்களில் சந்தோஷப் படுவதும் (ரோம. 5:2-5), மாம்சத்திலுள்ள கொடிய முள்ளை பணிவுடனும் பொறுமையுடனும் சகிப்பதும், கிறிஸ்துவின் வல்லமை இன்னும் அதிகமாக வெளிப்பட செய்வதற்கு நம்முடைய சொந்த பெலவீனங்களில் மேன்மை பாராட்டுவதும் என்பது தேவனுடைய அன்பான நோக்கங்களுடன் முற்றிலும் இசைவுள்ள இருதயங்களை உடையவர்களினாலேயன்றி, மற்ற எவர் களாலும் கூடாத காரியமாகும். இருதயமானது பெருமை, சுயஉயர்த்துதல், பகட்டு, புகழ், ஐசுவரியம் அல்லது ஏதேனுமொரு உலக ரீதியான இலக்கிற்கான விருப்பம் ஆகியவற்றின் தாக்கத்தின் கீழிருந்தால், உபத்திரவத்திலே சந்தோஷப்படுவது கூடாத காரியமாகும். ஆனால் நாம் பழைய மேல்நோக்கு ஆசைகளையும், மாம்சத்தின் விருப் பங்களையும் கீழ்ப்படுத்தும் போதும், விசுவாசம், நம்பிக்கை, அன்பு, பணிவுநயம், கீழ்ப்படிதல், வைராக் கியம் முதலியவைகள் ஆர்வமாகவும் சுறுசுறுப்பாகவும் நம்மில் கிரியை செய்யும்போதும், கிறிஸ்துவின் மூலம் நமக்களிக்கப்படுகிற தேவ தயவை உணரக் கூடியவர் களாயிருப்போம். அதற்குப் பிறகு ஒவ்வொரு அனுபவத் திலும் சந்தோஷப்படக் கூடியவர்களாயிருப்போம்.

*16.* கர்த்தராகிய யெஷூ ஆ மற்றும் பவுல் அப்போஸ்தலரின் முன்மாதிரியைப் பின்பற்றுகிற அனை வருக்கும் இது உண்மையாயிருக்கும் (1 பேது. 2:21; 1 கொரி. 11:1). "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" (யோவா. 15:5) என்று எஜமானர் அவரு டைய சீஷர்களிடம் சொன்னது உண்மையாயிருக்கிறது. தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் அனைவரும் எந்தளவிற்குக் கர்த்தரை தொழுது கொண்டு அவருடைய பெலத்தைச் சார்ந்திருக்கிறார்களோ, அந்தளவிற்குக் கர்த்தராகிய யெஷூ ஆவின் மூலமும் சத்திய வார்த்தையின் மூலமும் தேவனுடைய வல்லமை அவர்களில் செயல் படும். மேலும் இந்த வல்லமையானது தேவனுடைய ஜனங்களில் அதிக பலமுள்ளவர்களில் எவ்வாறு செயல் படுமோ பெலவீனர்களிலும் அவ்வாறே செயல்படும்.

*17.* ஏற்ற வேளையில் சகாயம் செய்வதற்குக் கிறிஸ்துவின் மூலம் அளிக்கப்படுகிற தேவனுடைய கிருபை எல்லா நேரங்களிலும் போதுமானதாக இருக்கும். இருந்தாலும், சகலத்தையும் நிறைவாக்கும் இந்த பெரிய கிருபை எவ்வித நிபந்தனையும் இல்லாமல் தேவனுடைய ஜனங்களின்மேல் ஊற்றப்படுவதில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மாறாகத் தங்களுடைய தேவையை அவர்கள் உணர்ந்து, ஏற்ற வேளையில் சகாயம் செய்யும் கிருபைக்காக அவர்கள் ஜெபத்துடன் வேண்டிக் கொள்ளும் போது மட்டுமே, அந்த ஜெபத்திற்குப் பதிலாக அந்த கிருபை அளிக்கப்படும். அடைக்கலான் குருவி தரையில் விழுவதைக் கவனிப்பவரும், நம்முடைய தலையிலுள்ள மயிரையும்கூட எண்ணுகிறவருமான தேவன், தேவையான பெலத்திற்காக நாம் செய்யும் விண்ணப்பங்களுக்கு நிச்சயமாகச் செவி சாய்ப்பார். (2 கொரி. 9:8; பிலி. 4:19)

*18.* “என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத் திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.” தேவனிடத்தில் விசுவாச உறுதி வைக்கிற அவருடைய அன்பான ஜனங்களுக்கு இந்த வார்த்தைகள் வளமான ஆசீர்வாதங் களை அளிப்பதாக. ஏனென்றால் அவர் அவர்களிடம் அன்பு கூருகிறார். அவர் அவர்களின் மேல் அக்கறை கொள்கிறார், அவர்களைத் தம்முடைய "கண்ணின் மணியைப் போல்" என்றென்றைக்கும் காப்பார் (உபா. 32:10; சங். 17:8; சக.. 2:8) தேவனுக்குச் சொந்தமான வர்களாக இருப்பதும், அவருடைய மா உன்னத அன்பின் ஆறுதலை உணருவதும் அவர் எப்பொழுதுமே "நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்திலே அனுகூலமான துணையுமானவராக" இருப்பதைக் கண்டு கொள்வதும் (சங். 46:1) என்னே அதிசயமான உணர்வா யிருக்கிறது.

## பெலன் பெறுவதற்காகத் தேவனை நோக்கிப் பார்ப்பது

ஒவ்வொரு தேவையிலும் நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன்,
அது இதுவரை ஒருபோதும் விருதாவாயிருந்ததில்லை;
உமது பலத்தையும் உருக்கமான அன்பையும் உணருகிறேன்,
அப்பொழுது சகலமும் மறுபடியும் நன்மையாக மாறுகிறது;
பாவம் வலி மற்றும் துக்கத்தின் வல்லமையைப் பார்க்கிலும்,
உம்மைப் பற்றிய சிந்தனை மிக அதிக வல்லமையுள்ளதாயிருக்கிறது.
அன்றாட வாழ்க்கையின் உழைப்பினால் அதைரியமடைந்து,
வாழ்க்கையின் பாரத்தினால் மனம் தளர்ந்து,
வாழ்க்கையின் தோல்விகளினாலும்
அச்சங்களினாலும் அவமானமடைந்து,
நான் வழியருகே சோர்ந்து விழுகிறேன்;

ஆனால் மனத்தாழ்மையுடன் உம்மை நோக்கிப் பார்க்கும்போது,
புதுப்பிக்கப்பட்ட உமது பலம் என்னுள்ளத்திலே எழும்புகிறது.
உமது மேன்மையான பேரமைதி இறங்கி வந்து,
என் பதற்றத்தை அடக்கி அமைதிப்படுத்துகிறது,
புத்துயிர் அளிக்கும் உமது அன்பு என்னைச் சுற்றிப் பாய்ந்து,
தடுமாறும் என் சித்தத்தைத் திடப்படுத்துகிறது;
உமது சமுகம் என் தனிமையை நிறைவாக்குகிறது,
உமது பரிபாலனம் சகலத்தையும் நன்மையாக மாற்றுகிறது.
உமது மேன்மையான பலத்தினால் நெருக்கமாக அரவணைக்கப்பட்டு,
உமது அன்பினால் பற்றிக் கொள்ளப்பட்டு, நான் நிலைத்து நிற்கிறேன்;
சகலத்திலும் உமது கரத்தை நான் காண்கிறேன்,
சகலமும் உமது கரத்திலிருப்பதையும் காண்கிறேன்;
நான் தேடாத வழிகளில் நீர் என்னை நடத்துகிறீர்,
என் துக்கத்தைச் சந்தோஷ துதியாக மாற்றுகிறீர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## நம்முடைய குறைவுகளெல்லாம் தேவன் நிறைவாக்குவார்

*BS# 431, Feb. 1972, p. 12*

*“என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து யெஷுஆவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்”*
*(பிலிப். 4:19)*

1. **தே**வனுக்கு சொந்தமானவர்களைக் குறித்து, அவர் கொள்ளும் பரிபாலன அக்கறையை குறித்து, நாம் ஒருபோதும் சந்தேகப்படக் கூடாது (1 தீமோ. 5:8). “உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்” (நீதி. 3:6). “கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார் [சரியான மொழி பெயர்ப்பு: அவருடைய (தேவனுடைய) வழியின்மேல் அவன் (பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளை) பிரியமாயிருக்கிறான்]. அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.” (சங். 37:4,5, 23,24).

2. நம்முடைய அனுபவங்களின் ஒவ்வொரு சிறு நிகழ்வையும் கூட நம்முடைய பரமபிதா திட்டமிட்டு ஏற்பாடு செய்கிறாரென்று நாம் புரிந்து கொள்ள வேண்டுமா என்று சிலர் கேட்க கூடும். பொதுவாக மனுஷர்கள் இந்த விஷயத்தின் இருபக்கங்களிலும் மிதமிஞ்சிய கருத்துக்களை உடையவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய மூளைகள் வெவ்வேறாக இருக்கின்றன. நம்முடைய அனுபவங்களும் வெவ்வேறாக இருக்கின்றன. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இயல்பாகவே இந்த விஷயங்களை வெவ்வேறான



கண்ணோட்டங்களிலிருந்து பார்க்க கூடியவர்களாக இருக்கிறோம். நம்மில் அநேகர் இயல்பாகவே வாழ்க்கையின் சிறு காரியங்களில் கர்த்தருடைய பரிபாலனங்களைக் கண்டு கொள்வதற்காக போதுமான அளவிற்கு தேடாதவர்களாக இருக்கிறோம் என்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால் அவர்கள் இதன் சம்பந்தமாக இன்னும் அதிக விழிப்புடன் கவனித்தால் பலர் இன்னும் அதிக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

3. இருந்தாலும் மேலாதிக்கம் செய்து மாற்றியமைக்கும் கர்த்தருடைய பரிபாலனங்கள் என்ற கருத்தை சிலர் மிதமிஞ்சிய விதத்தில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தவறி சகதிக்குள் கால் வைத்தாலும் நிச்சயமாக அதையும் கர்த்தர் திட்டமிட்டிருக்கிறார் என்று எண்ணுகிறார்கள். "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்" என்று நமக்கு உறுதியளிக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால் நாம் செய்கிற ஒவ்வொரு சிறு காரியத்தையும், நாம் எடுக்கிற ஒவ்வொரு சிறு படியையும், அது தவறான ஒரு படியாக நிரூபிக்கப் பட்டாலும் கூட கர்த்தர் அதை திட்டமிடுகிறார் என்பதை இது அர்த்தப்படுத்தாது. மாறாக நீதிமானுடைய வாழ்க்கையின் பொதுவான போக்கு கர்த்தருடைய கண்காணிப்பின்கீழ் இருக்கிறதை இது அர்த்தப்படுத்தும். “கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் (போற்றி துதிக்கும் பயபக்தியுள்ளவர்களுக்கு) சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.” “உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்” (சங். 34:7; 91:11, 12; எபி. 1:14)

4. “அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது” (ரோம. 8:28) என்று நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் மூலமும் நம்மை காக்கும் தேவ தூதர்களின் மூலமும் (மத். 18:10; அப். 12:15) தேவன் சில நேரங்களில் மிக சிறிய காரியங்களிலும் கூட செயல்படுவார் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது. இருந்தாலும் எல்லா காரியங்களிலும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும், கவனமாய் நடந்து கொள்ள வேண்டுமென்றும் (எல்லாவற்றையும் கவனித்து), அவருடைய ஊழியத்தில் நமக்களிக்கப்பட்ட உக்கிராணத்துவத்தின் மிக சிறிய காரியங்களிலும் கூட விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க வேண்டு

மென்றும் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார் (லூக். 16:10; 1கொரி. 4:2).

5. நம்மில் நாம் ஒன்றுமில்லை என்றும் நம்முடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்றும் உணர்ந்து தேவனை முழுமையாக சார்ந்திருக்கும் தன்மையை நாங்கள் பெரிதும் மதித்துணருகிறோம். ஏனென்றால் "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியை களிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (2கொரி. 3:5; 9:8). ஆகையால் நாம் நம்முடைய பிரச்சனைகளை பரமபிதாவிடம் கொண்டு செல்லும்போது, அவருடைய ஊழியம் சம்பந்தப்பட்ட மிக சிறிய காரியங்களை கூட அவரிடம் கொண்டு செல்லும் போது அவர் நம்மிடத்தில் மகிழ்ச்சி கொள் கிறார். மேலும் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப் பதிலும் "தம்முடைய ஐசுவரியத்தின்படி" நம்முடைய குறைவுகளெல்லாவற்றையும் "கிறிஸ்து யெஷுஆ வுக்குள் மகிமையிலே" நிறைவாக்குவதிலும் பரமபிதா களிகூருகிறார்.

6. தேவன் தம்முடைய ஜனங்களின் பாதையை, ஒரு கூட்டமாகவும், தனி நபர்களாகவும், விசேஷமாக வழி நடத்துகிறார். மாம்ச இஸ்ரயேலர்கள் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செல்ல வேண்டிய பொதுவான பாதையை தேவன் முன்பே ஏற்பாடு செய்திருக்கிறார். நாம் ஏற்கனவே பார்த்த வசனங்களுக்கு கூடுதலாக மற்ற பல வேதவசனங்களிலிருந்து இது தெளிவாகிறது: உபா. 8:2; 23:4, 5; 1 சாமு. 2:6-9; எஸ்றா 6:22; சங். 37:17, 28, 31-33; நீதி. 2:7, 8; 3:6; 20:22; 24:16; ஏசா. 26:7; 30:21; 31:4, 5; 40:11; 52:12; 58:11; எரே. 2:6; 3:4; 24:5-7; 31:9, 10, 28; ஆமோஸ் 3:7; 9:14, 15; 2 கொரி. 4:17, 18; பிலி. 1:12; எபி. 12:9-11.

7. வேதாகம உதாரணங்களும் இதை நமக்குக் காண்பிக்கின்றன. எகிப்திலும் பெலிஸ்தியாவிலும் இருந் தபோது ஆபிரகாம் மற்றும் சாராளின் காரியத்திலும் (ஆதி. 12:11-20;20), சோதோமின் அழிவின்போது லோத்தின் காரியத்திலும் (ஆதி. 19:15,16), புறம்பே தள்ளப்பட்ட போது ஆகாரின் காரியத்திலும் (ஆதி. 21:14-21), எகிப்திலிருந்த போது யோசேப்பின் காரியத்திலும் (ஆதி. 45:5; 50:20), குழந்தை பருவத்திலும் மற்ற பல நிகழ்வு களிலும் மோசேயின் காரியத்திலும் (யாத் 2:1-10), இஸ்ரயேல் தேசத்தின் காரியத்திலும் (எகிப்தில் வந்த வாதைகளிலும், வனாந்தர யாத்திரைகளிலும் அவர்களை பாதுகாத்தது, கானானை சுதந்தரித்தது, நியாயாதிபதி களின் மூலம் கிடைத்த விடுதலைகள்), சவுல், தாவீது, எசேக்கியா, எரேமியா, பாரூக் (எரே. 36-38), தானியேல், யோனா, சகரியா (லூக். 1:20-22, 57-64) ஆகியவர்களின் காரியத்திலும், கர்த்தராகிய யெஷுஆவின் குழந்தை பருவத்திலும் மற்ற பல நிகழ்வுகளிலும், பேதுரு (அப். 12:3-17) பவுல் மற்றும் சீலா (அப். 16:19-31) ஆகியவர்களின் காரியத்திலும் இதை நாம் காண்கிறோம்.

8. தேவனுடைய ஊழியக்காரர்களின் வருங் கால ஊழியத்திற்காக அவர்களை ஆயத்தப்படுத்து வதிலும் தேவனுடைய வழி நடத்தும் பரிபாலனங்களை நாம் காண்கிறோம். சாமுயேல், கர்த்தராகிய யெஷுஆ மற்றும் பவுல் அப்போஸ்தலரின் காரியத்தில் இது வெளிப்படையாக இருக்கிறது. மற்ற பல தேவனுடைய ஜனங்களின் காரியத்திலும் இதை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக லூத்தரின் வாலிப பிராயத்தில் ஒரு முறை அவர் பக்கத்திலிருந்த தோழன் மின்னல் தாக்கு தலினால் மரித்தபோது லூத்தர் காக்கப்பட்டார், ஜான் வெஸ்லியின் வீடு எரித்து, தப்பித்துக் கொள்வதற்கான மற்றெந்த வழியும் இல்லாதபோது, ஏணியாக செயல் பட்ட ஒரு மனுஷனின் மூலம் தேவன் அவரை காப்பாற்றினார். ரோம கத்தோலிக்கரின் நீதிமன்றத்தின் கொடிய துன்புறுத்தலிருந்து தேவன் ஜான் வெஸ்சலை விடுவித்தார்.

9. தேவனுடைய வருங்கால ஊழியக்காரர்கள் சம்பந்தமாக அவருடைய பரிபாலன கிரியைகளின் குறிப் பிடதக்க ஒரு எடுத்துக்காட்டு சாமுயேல் க்ரௌத்தர் (Samuel Crowthers) என்பவரின் காரியத்தில் நாம் காண்கி - றோம். அவர் ஏறக்குறைய 1800 ஆண்டில் ஆப்பிரிக்காவில் பிறந்தார். அப்போது அடிக்கடி நிகழும் இனங்களின் யுத்தங்கள் ஒன்றில் அவர் கொள்ளைக்காரர்களில் ஒரு வனால் பிடிக்கப்பட்டு, ஒரு குதிரைக்காக விற்கப்பட்டு, அதற்குப்பிறகு ஒரு புகையிலை மூட்டைக்காக திரும்ப விற்கப்பட்டு, இறுதியாக மதுபான ஒரு பீப்பாயீக்காக திரும்ப விற்கப்பட்டார், ஒரு அடிமையாக சங்கிலினால் கட்டப்பட்டு கடற்கரை வரை காடு வழியாக செய்யப் பட்ட நீண்ட பிரயாணத்தின் கோரங்களையும், அதற்குப் பிறகு மற்ற அடிமைகளோடு கப்பலில் மூச்சு திணறும் அளவிற்கு அடுக்கப்பட்ட ஒரு வாழ்க்கையின் கோரங் களையும் அனுபவித்தார். இறுதியாக அந்த கப்பல் பிரிட்டன் நாட்டின் கப்பலால் கைப்பற்றப்பட்ட பிறகு அவர் இங்கிலாந்திற்கு வந்து விடுதலை பெற்றார். இங்கிலாந்தில் அவரை தத்து எடுத்துக் கொண்டவரின் வீட்டில் கிறிஸ்தவனானார், மதசார்பற்ற கல்வியை பெற்று, அதற்குப்பிறகு ஆப்பிரிக்காவில் சமய பரப்பாள ஊழியத்திற்காக பயிற்றுவிக்கப்பட்டார். ஆப்பிரிக்கா விற்கு அனுப்பப்பட்டு அங்கே ஆயிரக்கணக்கானவர் களை கிறிஸ்துவிடம் திருப்புவதில் அதிக ஊழியம் செய்தார்.

10. தேவனுடைய பரிபாலன அக்கறையின் மற்றொரு எடுத்துக்காட்டு இவ்வாறாயிருக்கிறது: சீர் திருத்தலின் காலத்தில் வார்டெம்பர்க் (Wurtemberg) என்ற ஊரை சேர்ந்த ப்ரென்டியஸ் (Brentius) என்பவரை துன்புறுத்தும் ராணுவ வீரர்கள் பின்தொடர்ந்த போது அவரொரு வைக்கோல் குவியலுக்குள் தப்பி சென்று, வைக்கோலின்கீழ் தன்னை மறைத்துக் கொண்டார். ராணுவ வீரர்கள் அவ்விடத்திற்கு வந்து, தங்கள் ஈட்டிகளை கொண்டு வைக்கோலுக்குள் குத்தி பார்த்தும் அவரை கண்டு பிடிக்கவில்லை. அடுத்த பதிநான்கு நாட்களுக்கு ஒரு கோழி அவ்விடத்திற்கு வந்து ஒவ் வொரு நாளும் அந்த வைக்கோலுக்குள் அவருக்கருகில் ஒரு முட்டையிட்டது. அதுவே அவருக்கு உணவா யிருந்தது. பின்பு அந்த கோழி முட்டையிட நிறுத்தின போது, மறைவிடத்திலிருந்து வெளியே வருவதற்கு அதை ஒரு அறிகுறியாக கருதினார். ராணுவ வீரர்கள் அதற்கு சற்றுமுன்புதான் அந்த ஊரைவிட்டு சென்றதை அறிந்து கொண்டார். பாதுகாப்பான வேறொரு இடத் திற்கு அவரால் செல்ல முடிந்தது.

11. தம்முடைய ஐசுவரியத்தின்படி நம்முடைய குறைவையெல்லாம் (இது நமக்கு தேவையான காரியங் களை அர்த்தப்படுத்துகிறது, இது நாம் சுயசித்தமாக விரும்பும் எல்லா காரியங்களை அர்த்தப்படுத்தாது) கிறிஸ்து யெஷுஆவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிற பிதாவின் பரிபாலன அக்கறையிலே தேவனுடைய ஜனங் களெல்லாம் களி கூருவார்களாக. அவருடைய வாக்குத் தத்தங்களை குறித்து நாம் ஒருபோதும் சந்தேகப்பட வேண்டாம். ஏனென்றால் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே (எபி. 10:23).

★★★★★★★★★★★★★★★★★★★★★

# தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாகிய பரிசுத்த பவுல் தேவனை மகிமைப்படுத்தினார்


***PT# 549, May-June 1977, pp. 34,35***

*"நீங்கள் … எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்"*
*(1 கொரி. 10:31)*

*1.* **ப**வுல் அப்போஸ்தலரில் நாம் என்னே அற்புதமான முன்மாதிரியைக் காண்கிறோம். கர்த்தருக் கென்று தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக அவருக்குக் கிடைத்த பெரிய வெற்றியின் காரணம் அவர் தன்னைத் தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தார் என்பதாகும் என்பதில் சந்தேகமில்லை. அவர் தன்னு டைய சொந்த சித்தத்தைச் செய்வதற்காக அல்லாமல், பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காகத் தன்னை எந்தள விற்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தாரென்றால், யெஷுஆ அவரை மேன்மையான விதத்தில் ஒரு அப்போஸ்தலராகவும், தம்முடைய வாயாகவும், ஒரு ஊழியக்காரராகவும் உபயோகிக்கும் அளவிற்காகும்.

*2.* கர்த்தராகிய யெஷுஆவின் முதல் வருகையில் அவர் இரட்சிப்பைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் விவரங்களை விளக்காதிருந்தார். ஏனென் றால் அப்போஸ்தலர்கள் உட்பட உண்மைத்துவமுள்ள சீஷர்கள் அனைவரும் சுபாவ மனிதர்களாக மட்டுமே இருந்தார்கள். ஆகையால் அவர்கள் தேவ வார்த்தையின் ஆழமான காரியங்களைப் புரிந்து கொள்ள இயலாத வர்களாக இருந்தார்கள் *(1 கொரி. 2:9-14)*. பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தல் மற்றும் அபிஷேகம் என்னும் கருத்தில் அவர்கள் பெந்தெகொஸ்தே வரை பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளாதிருந்தார்கள். ஆகையால் கர்த்தராகிய யெஷுஆவின் போதனைகள் பிரதானமாக உவமைகளின் மூலமும் மறைபொருள்களின் மூலமும் கொடுக்கப்பட்டன என்று நாம் வாசிக்கிறோம். இருந் தாலும் அவருடைய சீஷர்கள் பிரதிஷ்டை செய்தவர் களாக இருந்ததால், ஏற்ற வேளைக்குரிய ஆகாரமாகக் கர்த்தர் அவர்களுக்கு வெளிப்படுத்த சித்தமாயிருந்த காரியங்களை அவர்கள் புரிந்து கொண்டார்கள் *(மத். 13:10 -17)*. ஒரு முறை எஜமானர் சீஷர்களிடம் இவ்வாறு சொன்னார். *"இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவை களை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவி வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்தும்; … வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிக்கும்" (யோவா. 16:12,13).*

*3.* பரிசுத்த பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, இவ்வித கட்டுப்பாடுகள் குறைந்தன. பல்வேறு இடங்களிலுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு அவர்கள் நிருபங் களை எழுதினார்கள். அவைகளில் அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து ஏராளமாக எழுதினார்கள். அவர் களுடைய எழுத்துக்களில் சில எழுத்துக்கள் அடிப்படை சத்தியங்கள் சம்பந்தப்பட்டவைகளாக இருந்தன. அவைகள் கிறிஸ்துவுக்குள் "குழந்தைகளாக" இருப்பவர் களுக்கு ஏற்றவைகளாக இருந்தனவென்று அவர்கள் அறிவித்தார்கள். மற்ற எழுத்துக்களோ, தேவனுடைய



திட்டத்தின் ஆழமான காரியங்களைக் கொண்ட "பல மான ஆகாரமாக" இருந்தன *(எபி.. 5: 13, 14; 6: 1-3; 1 பேது. 2: 1-3; 2 பேது. 3: 18)*.

*4.* எதிராளியானவன் ஆதி சபையில் போட்டி மனப்பான்மையையும், மதப்பிரிவு பற்றையும் தூண்டக் கூடியவனாக இருந்தான் என்பதில் ஆச்சரியமில்லை. "நான் பவுலைச் சேர்ந்தவன்", "நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்" அல்லது "நான் பேதுருவைச் சேர்ந்தவன்" என்று சொன்ன சிலரில் வெளிப்பட்ட தவறான ஆவிக்கு எதிராக பவுல் அப்போஸ்தலர் எழுதினார். *"கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்?"* என்று பவுல் அவர்களிடம் கேட்டார். மதப்பிரிவு பற்றுடைய பக்குவமற்ற இவ்வித நடைமுறைகளுக்காகப் பவுல் அவர்களைக் கடிந்து கொண்டார் *(1 கொரி. 1: 10-13; 3: 1-7)*. மிக அதிக பிரகாசிப்பித்தலின் இக்காலத்திலும் தங்களைப் பல் வேறு மதப்பிரிவுகளாகப் பிரித்துக் கொண்ட கிறிஸ்தவர்களைக் குறித்து அவர் என்ன சொல்லி இருப்பார்? மேலும் லவோதிக்கேயா சபையின் நட்சத் திரத்தின் இரு அங்கத்தினர்களின் மூலம் தேவன் விசேஷ மாகக் கொடுத்திருக்கிற சத்தியத்தினால் பிரகாசிக்கப் பட்ட சில தலைவர்களும் கூட, சீஷர்களைத் தங்க ளிடத்தில் இழுத்துக் கொள்வதற்காக, அந்த சத்தியத் திற்கு விரோதமாகப் போதிப்பதைப் பவுல் பார்த்திருந் தாரேயானால், அவர்களிடம் என்ன சொல்லி இருப்பார்? *(அப். 20:30; ரோம. 16:17)*

## பரிசுத்த பவுலின் பணிக்கான தகுதிகள்

*5.* பரிசுத்த பவுல் பன்னிரெண்டு அப்போஸ் - தலர்களிலும் மிக அதிக கல்வி கற்றவராயிருந்தார். யூதாஸ்காரியோத்தின் இடத்தை நிரப்ப கர்த்தர் பவுலை நியமித்திருந்தார். தர்சு பட்டணத்தின் சவுல் கிறிஸ்துவுக் கெதிராகவும், அவருடைய சீஷர்களுக்கெதிராகவும் செய்த போரில் மிகவும் தப்பெண்ணமுடையவராகவும், மதவெறியுடையவராகவும் தன்னை வெளிப்படுத்தினார் என்பது உண்மை. ஆனால் அவருடைய புரிந்து கொள்ளு தலின் கண்கள் திறக்கப்பட்டிருந்த பிறகும், அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புது சிருஷ்டியாக ஆனபிறகும், பரிசுத்த பவுல் தெய்வீக காரியங்களைப் பற்றிய அதிசயமான புரிந்து கொள்ளுதலை வெளிப் படுத்தினார். அவருடைய புரிந்து கொள்ளுதலைக் குறித்து விளக்கும் போது, அவர் எல்லா மகிமையையும்

தேவனுக்குரியதாக ஆக்கினார். தான் ஒன்றுமில்லாத வராக இருந்தாலும் தேவன் அவருக்கு ஏராளமான தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் கொடுத்ததாக அவர் அறிவித்தார் *(2 கொரி. 12: 1, 7, 11, 12).*

*6.* இவைகளெல்லாம் பவுல் அப்போஸ்தலரைக் குறித்து கர்த்தராகிய யெஷுஆ சொன்ன காரியங்களுக்கு இணக்கமாக இருந்தன: "அவன் ... நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டு மென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" *(அப். 9:15,16).* கல்வி கல்லாத ஒரு மனிதனைக் காட்டிலும், தன்னுடைய சொந்த சித்தத்தைக் கர்த்தருக்கு முழுமை யாக ஒப்புக் கொடுத்த கல்வி கற்ற ஒரு மனிதனை, திறமையுள்ள மனிதனை இயல்பாகவே கர்த்தர் இன்னும் நன்றாக உபயோகிக்கக் கூடும். மற்ற அப்போஸ்தலர்கள் சிலரைக் குறித்து அவர்கள் படிப்பறியாதவர்கள் என்றும் பேதமையுள்ளவர்கள் என்றும் ஜனங்கள் அறிந்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது *(அப். 4:13).* ஆனால் பரிசுத்த பவுலின் காரியம் அவ்வாறில்லை. அவர் கல்வி கற்றவராகவும் அதிசயமான சிந்திக்கும் திறனுடையவராகவும் இருந்தார். வேதாகமத்திலுள்ள ஆழமான காரியங்களைப் புரிந்து கொள்ளும் படிக்கு பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், பரிசுத்த பவுலின் எழுத்து களிலுள்ள பகுத்தறிவுக்கிணக்கமான தன்மையையும், ஞானத்தையும் வல்லமையையும் கண்டு நிச்சயமாக வியப்படைகிறார்கள்! புறஜாதியார்களுக்குக் கர்த்தரு டைய வாயாகச் செயல்பட வேண்டியவராக முன்னிலை க்குத் தள்ளப்பட்ட பரிசுத்த பவுல், புதிய சகாப்தம் சம்பந்தப்பட்ட காரியங்களை மற்ற அப்போஸ்தலர் களைவிட அதிக விரைவாகப் புரிந்து கொண்டார். ராஜ்யத்தின் சிலாக்கியங்களில் புறஜாதியார்கள் யூதர் களோடு உடன்சுதந்தரவாளிகளாக இருக்க வேண்டியதா யிருந்தது என்று அவர் புரிந்து கொண்டார் *(எபே. 3: 1-12; கொலோ. 1: 25-29).* இயல்பாகவே, பரிசுத்த பவுல் மித மிஞ்சிய விதத்தில் செயல்படுவதாகச் சிலர் எண்ணி னார்கள். ஆகையால் அவர் பன்னிருவரில் ஒருவரல்ல வென்றும் அப்போஸ்தலராகக் கருதப்படக் கூடியவர் அல்லவென்றும் விவாதிக்கத் தொடங்கினார்கள்.

*7.* ஒன்றுமில்லாதவராக இருக்கவும், மற்றவர் கள் அவர்களுடைய விருப்பத்தின்படி அவரை மதிப்பிட விட்டுவிடவும் பரிசுத்த பவுல் முழு விருப்பமுள்ளவராக இருந்தாலும், சத்தியத்தினிடமும் சகோதரர்களிடமும் அவருக்கிருந்த கடமையை உணர்ந்தார். ஆகையால் அவர் அப்போஸ்தலராக இருக்க தகுதியுள்ளவரென்பதைப் பற்றிய முழு நிரூபணம் அவரிடம் இருந்தது என்றும், தெய்வீக திட்டத்தின் புரிந்து கொள்ளுதல் சம்பந்தமாக அவர் மகா பிரதான அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவுள்ளவர் அல்லவென்றும் திட்டவட்டமாகக் கூறி னார். கர்த்தராகிய யெஷுஆ சொல்லியிருந்த வரப் போகிற காரியங்களைக் குறித்து அவர் மற்ற எல்லோரிலும் அதிகமாகப் பரிசுத்த பவுலுக்கு வெளிப் படுத்தினதாகவும் அவர் தெளிவாகக் கூறினார் *(யோவா. 16: 13; 2 கொரி. 11: 5; 12: 7; கலா. 2: 2-10 முதலியவை).*

## கிறிஸ்துவின் நிமித்தம் அப்போஸ்தலர் பட்ட பாடுகள்

*8.* பரிசுத்த பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்காகக் கடினமாக உழைத்தார். ஆனால் அந்த சபையார் அவரை திறமையற்ற ஒரு போதகராகக் கருதினதால் சத்தியத்தில் சரியாக முன்னேற்றமடைய தவறினது அவருக்கு வருத்தத்தை உண்டாக்கினது. ஆகை யால் *2கொரி.11:21-33* வரையுள்ள வசனங்களில் அவர் புத்தியீனமான மேன்மை பாராட்டுதல் என்றழைக்கிற ஒன்றை அவர்கள் நிமித்தம் செய்கிறார், அவர் மேன்மை பாராட்டுதலை அங்கீகரிக்கவில்லை. இருந்தாலும் அவர் சொல்வதைக் கேட்கிறவர்களின் நிமித்தம், சில காரியங் களைத் தெரிவிக்க அவர் விரும்பினார். அவ்வாறு செய்ய பரிசுத்த ஆவி அவரை வழி நடத்தினதிற்காக நாம் மகிழ்கிறோம். ஏனென்றால் அதின்மூலம் நாம் பவுல் அப்போஸ்தலரை இன்னும் நன்றாக அறிந்து கொண்டு, ராஜாதி ராஜாவானவரிடத்தில் அவர் வெளிப்படுத்தின அன்பான ராஜ விசுவாசத்தை இன்னும் அதிக முழுமை யாக மதித்துணருகிறோம். மேலும் இக்காலம் வரையிலும் கூட விசுவாச வீட்டாருக்குத் தெய்வீக சத்தியத்தைத் தெரிவிப்பதற்கு அவர் கர்த்தரால் தெரிந்து கொள்ளப் பட்ட பாத்திரமாக இருந்தார் என்ற உண்மையையும் நாம் இன்னும் முழுமையாக மதித்துணருகிறோம்.

*9.* ஆனால் அப்போஸ்தலர் தன்னைக் குறித்து, அதாவது தன்னுடைய திறமைகள், பேச்சுத்திறன், அவர் பேச்சை கேட்டு ஜனங்கள் அடைந்த வியப்பு, அவருடைய திறமையைக் கண்டுணர்ந்த ஜனங்களின் எண்ணிக்கை முதலியவைகளைக் குறித்து மேன்மை பாராட்டவில்லை. ஆம், அவருக்கு அவமானத்தை உண்டாக்கும் காரியங் களாக மற்றவர்கள் கருதுபவைகளைக் குறித்து அவர் மேன்மை பாராட்டினார். சத்தியத்தின் நிமித்தம் அவர் எவ்வாறு பாடுபட தெய்வீக பரிபாலனத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதைக் குறித்து அவர் களிடம் சொன்னார். அவர் அடிப்பட்டது, மிலாறுகளால் அடிப்பட்டது, காவலில் வைக்கப்பட்டது, கடலில் வந்த மோசங்கள், கள்ள சகோதரரிடத்தில் உண்டான மோசங் கள், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்கள் ஆகியவற் றைக் குறித்து அவர்களிடம் சொன்னார். அவருக்கு இந்த காரியங்கள் தெய்வீக அன்பு மற்றும் தயவின் அடையாளங்களாக இருந்தன. மேலும் அவர் கர்த்தரிடத் திலும் அவருடைய நீதியினிடத்திலும் அன்பு கூருகிறவ ராக இருந்தார் என்பவைகளுக்கும் அவைகள் சாட்சியா யிருந்தன. மேலும் அவர் கர்த்தருக்காகவும் சத்தியத்திற் காகவும் பாடுபட விருப்பமுள்ளவராக இருந்தார் என்பதற்கும் அவைகள் சாட்சியாயிருந்தன.

*10.* இவ்வாறாகப் பார்க்கும்போது, *2கொரி. 11:21 -33* வரையுள்ள வசனங்கள் *(2கொரி. 1:3-9* வரையுள்ள வசனங்களையும் பார்க்கவும்) தேவ வார்த்தையின் மிகவும் மதிப்புவாய்ந்த பகுதிகளாக இருக்கின்றன. மற்ற இடங்களில் காணப்படாத தகவலை இந்த பகுதி நமக்குக் கொடுக்கிறது. சிலுவையின் ஒரு போர் வீரனைக் குறித் தும், அவர் எவ்விதமான காரியங்களைச் சகித்தார் என்பதைக் குறித்தும் நமக்கொரு தெளிவான காட்சியைக் கொடுக்கிறது. "மரண பரியந்தம் விசுவாச உண்மைத்துவ முள்ளவனாயிரு" என்று இது நமக்குச் சொல்கிறது. கர்த்தராகிய யெஷுஆவின் அடிச்சுவடுகளையும் அவரு டைய இந்த மேன்மையான சீஷரின் அடிச்சுவடுகளையும் பின்பற்றுங்கள் என்றும், உங்களைக் குறித்து மேன்மை பாராட்டாமல், தேவனைக் குறித்தும், அவருடைய சத்தியம் சம்பந்தமாக உங்களுக்குக் கிடைத்த ஊழிய சிலாக்கியங்களைக் குறித்தும் மேன்மை பாராட்டுங்கள் என்றும் இது நமக்குச் சொல்கிறது.

## அப்போஸ்தலரின் வெற்றியின் ரகசியம்

*11.* இப்பொழுது நாம் சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்திலிருக்கிறோம். பரிசுத்த பவுலும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி வகுப்பைச் சேர்ந்த மற்றவர்களும் அவரோடு நித்திய மகிமைக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பிதாவுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் (எபே. 5: 25-27; வெளி. 19: 7, 8). அந்த மகிமையான கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் விசுவாச உண்மைத்துவமுள்ள போர் வீரர்களாக இருந்தார்கள் என்று நாம் நிச்சயித்துக் கொள்ளலாம். அவர்களில் எந்த ஒருவரும் போரிலிருந்து தப்பி ஓடினவராகவோ கர்த்தரைக் குறித்து வெட்கப்படுகிறவராகவோ அவருடைய சத்தியத்தைக் குறித்து வெட்கப்படுகிறவராகவோ இருக்கவில்லை. இவர்களைக் குறித்து எஜமானர் அறிவிக்கிறதாவது, அவர் அவர்களைக் குறித்து வெட்கப்படாமல் பிதாவுக்கு முன்பாகவும் அவருடைய பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் அவர்கள் நாமங்களை அறிக்கை பண்ணுவார் என்பதாகும் (மத். 10: 32, 33; மாற். 8: 38; லூக். 12: 8, 9).

*12.* சாட்டையால் அடிக்கப்படுதல், காவலில் வைக்கப்படுதல், பலவகையான அடிகள் போன்ற கோரமான துன்பங்களை அப்போஸ்தலர் சகித்ததின் ரகசியம் நம்முடைய இந்த வருடத்தின் சட்ட வாக்கியத்தின் வார்த்தைகளில் நமக்குச் சொல்லப்படுகிறது - 2கொரி. 12:9. கர்த்தருடைய கிருபை அவருக்குப் போதுமானதாக இருந்தது. அவருடைய பலவீனத்தில் கர்த்தருடைய வல்லமை பூரணமாக விளங்கினது . இதுவே வெற்றி சிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவ வாழ்க்கையின் ரகசியமாக இருக்கிறதல்லவா? நம்முடைய எஜமானரின் காரியமும் அவ்வாறே இருந்ததல்லவா? அவருக்குள்ளிருந்த பிதாவின் பரிசுத்தாவி, அவர் பிதாவைச் சார்ந்திருந்தது, அவர் பிதாவின் முகத்தின் பிரகாசத்தை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தது - இவைகளே பிதாவின் நற்சித்தத்தை விரும்பவும் செய்யவும் நம்முடைய இரட்சகரில் கிரியை செய்த தேவனுடைய வல்லமையாக இருந்தனவல்லவா? (யோவா. 1: 32, 33; 3: 34; 5: 19; எபி. 10: 5-7; 12: 2; பிலி. 2: 13).

*13.* அந்நாள் முதல் இந்நாள் வரை கர்த்தரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இதுவே உண்மையாக இருக்கிறது. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" என்று எஜமானர் தம்முடைய சீஷர்களிடம் உண்மையாகச் சொல்லி இருந்தார் (யோவா. 15:15). நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் மூலமும், சத்திய வார்த்தையின் மூலமும் யெஷுஆவின் சீஷர்களின் மூலமும் கிரியை செய்கிற தேவனுடைய வல்லமையினாலே சகலமும் ஆகும். மேலும் இந்த வல்லமையானது கிறிஸ்துவின் சீஷர்களில் அதிக பலமுள்ளவர்களிலும் மிகுந்த பெலவீனமானவர்களிலும் ஒரே விதமாகச் செயல்படும். கர்த்தருடைய கிருபை அனைவருக்கும் எல்லா தேவைகளுக்கும் போதுமானது. இருந்தாலும் இவ்வளவு மேன்மையான தகுதி எவ்வித நிபந்தனையுமில்லாமல் கர்த்தருடைய ஜனங்களுக்கு அளிக்கப்படுவதில்லை என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. மாறாகத் தங்களுடைய தேவையை அவர்கள் உணர்ந்து, தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் சகாயஞ் செய்யும் தேவ கிருபைக்காக ஜெபத்தோடு செய்யும் வேண்டுகோளுக்குப் பதிலாக அது அளிக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★



## என்னுடைய தமஸ்கு பாதை

*BS Jan 1977 p.7*

என்னுடைய பாவமான போக்கின் தப்பறைகளைத்
தமஸ்குவின் பாதை வெளியரங்கமாக்கும்;
சரியானது எதுவென்று என் கர்த்தர் எனக்குக்
காண்பிப்பார்
என் அந்தகாரத்தைப் பகலாக மாற்றுவார்.
என் மாம்சத்திலுள்ள ஒரு முள் எனக்கு
வேதனையுண்டாக்கக்கூடும்,
அது நீக்கப்படுவதற்கு நான் ஏங்கக் கூடும்;
ஆனால் "சிலுவையில்லையென்றால்
ஜீவனுமில்லை"
என்று யெஷுஆ சொல்கிறார்;
அவர் எனக்கு கிருபை அளிப்பார், அவரில் நான்
திடங் கொள்வேன்.




**நமது**
**கர்த்தராகிய யெஷுஆவின்**
**ஞாபகார்த்தத்தை**
**2025 ஏப்ரல் மாதம் 10-ம் தேதி**
**வியாழக்கிழமை**
**மாலை 6 மணிக்குப் பின்பு**
**ஆசரிப்போமாக**

**"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"**

## என்னுடைய முள்

*BS Jan 1977 p.7*



தேவனுடைய ராஜரீக சிங்காசனத்திற்கு முன்பாக,
ஊக்கமான ஜெபத்துடன் நான் நின்றேன்;-
எனக்குச் சொந்தமானதென்று நான் அழைக்கக் கூடிய
அருமையான ஏதேனும் ஒரு ஈவை அளிக்க
அவரிடம் கெஞ்சினேன்.

அவர் கரத்திலிருந்து அந்த ஈவைப் பெற்றுக் கொண்டேன்,
ஆனால் அவ்விடத்தை விட்டு செல்கையில்
"கர்த்தாவே இது ஒரு முள்ளாக இருக்கிறதே!
அது என் இருதயத்தைத் குத்துகிறதே!" என்று
சத்தமிட்டுக் கூறினேன்.

"நீர் எனக்கு அருளின இந்த ஈவு
விசித்திரமானதாகவும் எனக்கு வேதனை
உண்டாக்குவதாகவும் இருக்கிறதே!";
"நல்ல ஈவுகளை அளிக்க நான்
பிரியமாயிருக்கிறேன்,
ஆகையால் மிக சிறந்த ஈவையே உனக்களித்தேன்"
என்றார்.

நான் அந்த ஈவை வீட்டிற்குக் கொண்டு சென்றேன்,
அந்த கொடூரமானமுள் முதலில் என்னை மிகவும்
காயப்படுத்தினாலும்,
வருடங்கள் செல்ல செல்ல,
அதின் ஆசீர்வாதங்களை இன்னும் அதிகமாக
நேசிக்க இறுதியாகக் கற்றுக் கொண்டேன்.

அவருடைய கிருபையைக் கூடுதலாக அளிக்காமல்,
முள்ளை ஒருபோதும் கொடுக்க மாட்டார் என்று
நான் கற்றுக் கொண்டேன்/
அவருடைய முகத்தை மறைக்கிற திரையை
விலக்கி,
அது திரும்ப அவர் முகத்தை மூடாதபடி
முள்ளைக் கொண்டு திரையை அகற்றிப்
பொருத்துகிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## பெங்களூரு கன்வென்ஷன்

கர்த்தருக்குச் சித்தமானால்
"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"
சகோதர ஐக்கியக் கூட்டம், பெங்களூரில்
ஆகஸ்ட் மாதம் 8,9,10 தேதிகளில்
(வெள்ளி, சனி, ஞாயிறு) நடைபெறும்.
"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"

## நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.

சங். 119:67

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது


**புது உடன்படிக்கை**

*Monthly newsletter published by*
*the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*